எமது ஆதரவாளர்கள்
அன்பர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
ராமகிருஷ்ணாஸ்
ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7179

★ ★
Registered as a News paper in Ceylon  விலை சதம் 15

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி  National Tamil Daily
மலர் 10  (13-1-69)  இதழ் 336
யாழ்ப்பாணம் கீலக மார்கழி 30 ஷவ். 23 திங்கட்கிழமை

சர்க்கரை வேண்டுமா?
சிறிதும் கலப்பின்றி
சுத்தமான
சர்க்கரை
தொகையாக
எமது கையிருப்பிலுண்டு
பொங்கல் திருநாளை
பொலிவுடன் கொண்டாட
எம்மை நாடுங்கள்!

ஆ. வயித்திலிங்கம் அன்கோ
45, கே.கே.எஸ் றேட், யாழ்ப்பாணம்
போன்: 663

# கோப்பாய்எம்.பி.வீட்டில்ஜி.ஜி. நடத்திய மேயர் சமரச பேச்சு

## துரைராஜாவுக்கு முதல் வருட மேயர் பதவி

### முடிவை வெளியிடுவதில்லையென கூடிப்பேசியவர்கள் உறுதி

### மூவர் வாக்களிப்பில் கலந்துகொள்ளார்?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகருக்குப் புதிய மேயரைத் தெரிவுசெய்வதற்காகச் சென்ற சில தினங்களாகத் தீவிர முயற்சிசெய்து வந்தவர்கள் பலர் நேற்றிரவு கண்ணுறங்கவேயில்லை. இன்று அதிகாலை வரை மேயர் தெரிவில் ஓர் உடன்பாடு காணும் பொருட்டு தமிழ்க்காங்கிரஸ், தமிழரசு அங்கத்தவர்களும், தலைவர்களும், பிரமுகர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர். கோய்ப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. கதிரவேற்பிள்ளையின் இல்லத்தில் அதிகாலைவரை பேச்சுவார்த்தை நடைபெற்றதாயினும் எந்த முடிவையும், எவருக்கும் வெளியிடுவதில்லையென்று பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டவர்கள் வாக்குறுதி செய்துகொண்டனர். தமிழ்க் காங்கிரஸ்-தமிழரசுக் கூட்டணி சார்பில் மேயர் பதவிக்கு இன்று பிரேரிக்கவிருக்கும் பெயரை வெளியிட்டால் எதிர்தரப்பினர் இன்று பகலுக்குள் நிலைமையை மாற்றிவிட முயற்சிசெய்யக்கூடுமென்ற அச்சம் பேச்சுவார்த்தைகளின் போது தெரிவிக்கப்பட்டது. இப்போதுள்ள நிலையில் திரு. தா. ச. துரைராசாவை முதல் வருட மேயராகத் தெரிவுசெய்வதென்றும், அடுத்த வருடத்துக்கு திரு. சி. நாகராசாவைத் தெரிவுசெய்வதென்றும் காங்கிரஸ், தமிழரசு பேச்சுவார்த்தை முடிவுசெய்திருப்பதாகத் தெரிகிறது. இந்நிலைமையில் திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு. ஏ. விசுவநாதன், திரு. என். மார்க்கண்டு ஆகியோர் மேயர் தெரிவில் வாக்களிப்பில் கலந்துகொள்ளமாட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வல்வையில் திடீர் சோதனை

### விலையுயர்ந்த சேலைகள் சிக்கின

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பொங்கல்பண்டிகை நெருங்க நெருங்க வல்வெட்டித்துறைப் பகுதியில் இராணுவம், பொலிஸ், சுங்க இலாகாவினர் ஆகியோரின் நடமாட்டமும் திடீர் சோதனைகளும் அதிகரித்துள்ளன

நேற்றும் இன்றும் பலவீடுகளையும், கடைகளையும் பொலிசாரும், சுங்கப்பகுதியினரும் சோதனையிட்டனர்.

ஒரு வீட்டில் சுங்கப்பகுதியினர் திடீர் சோதனையிட்டபோது 29 விலையுயர்ந்த சேலைகளையும் நான்கு கம்பளங்களையும் கைப்பற்றினர். இவற்றின் பெறுமதி 3500 ரூபாய் என அவர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

மற்றொரு வீட்டைச் சோதனையிட்ட சுங்கப்பகுதியினர் மூன்று விலையுயர்ந்த சேலைகளையும் மூன்று பட்டு வேட்டிகளையும் கைப்பற்றியதுடன் வீட்டுக்காரருக்கு ஐம்பது ரூபாய் அபராதமும் விதித்தனர்.

வல்வெட்டித்துறையில் ஒரு வீட்டைச் சோதனையிட்ட பொலிசார் அங்கிருந்த 45 சாரங்களை எடுத்ததுடன் வீட்டுக்காரருக்கு 750 ரூபா அபராதமும் விதித்தனர்.

## வடக்கு கரைகளில் முப்படையும் உஷார்

கொழும்பு, ஞாயிறு

வடக்குக் கரையோரங்களில் ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளும் உஷார்படுத்தப்பட்டுள்ளன

வல்வெட்டித்துறை கடற்கரையிலிருந்து மாதகல் கரைவரை இந்த உஷார் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடத்தல் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கே இந்த உஷார் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாம்.

தைப்பொங்கல் பண்டிகை முடிவடையும்வரை வடக்குக் கரையோரப்பகுதிகளில் இரவும்பகலும் இராணுவத்தினர் விழிப்புடன் காவல் புரியவேண்டுமென இராணுவத்தினருக்கு தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலை உத்தரவிட்டிருக்கிறார்.

சக்திவாய்ந்த இயந்திர மோட்டார்ப் படகுகள் நான்கு வல்வெட்டித்துறைக் கரையிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் தென்னிந்திய கரையை நோக்கிச் சென்றதாகவும் வெறும் படகுகளாகச் சென்ற இவை அங்கிருந்து விலையுயர்ந்த சேலைகள், வேட்டிகள் மற்றும் பொருள்களை இங்கு கடத்திவருவதற்காகவே சென்றிருக்கலாமெனவும் இதனால்தான் தைப்பொங்கல் பண்டிகை முடிவடையும்வரை வடக்கு கரையோரப்பகுதியில் காவல்

(8-ம் பக்கம் பார்க்க)

## வேலை நீக்கம்

கொழும்பு, ஞாயிறு

இரத்மலானை புகையிரத வேலை நிலையத்தில் 20 ஊழியர்கள் தற்காலிகமாகவேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இதே வேலை நிலையத்தில் இருந்து மேலும் 20 பேர் வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். சமீபத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக ஏற்பட்ட குழப்பம் காரணமாகவே இவ்வாறு வேலை நீக்கமும் மாற்றமும் ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

## சட்டவிரோதமாக ஊர்வலம் நடத்தினர்களாம்

### சீனசார்பு கம்யூ.பிரமுகர்களுக்கு அபராதம்

குரும்பசிட்டி, ஞாயிறு

சட்டவிரோதமாக ஊர்வலம் நடத்தியதாகவும் அமைதிக்குப்பங்கம் விளைவிக்கக் கூடிய சுலோகங்களைக் கோஷித்ததாகவும் குற்றம் சாட்டி சீன சார்பு கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த மூவர்மீது தொடரப்பட்ட வழக்கில் இந்த இரண்டு குற்றச்சாட்டிலும் குற்றவாளிகளாகக் கண்ட மல்லாகம் நீதிபதி மூவருக்கும் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

சட்டவிரோதமான ஊர்வலம் நடத்தியதென்ற முதல்குற்றச்சாட்டில் முதல் எதிரியான கே. ஏ. சுப்பிரமணியத்துக்கு 150 ரூபாயும் அமைதிக்குப்பங்கம் விளைவிக்கக்கூடிய சுலோகங்களைக் கோஷித்ததென்ற இரண்டாவது குற்றச்சாட்டிற்கு 200 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

இரண்டாவது எதிரி வி. கந்தசாமிக்கு முதலாவது குற்றத்துக்கு 250 ரூபாவும் இரண்டாவது குற்றத்துக்கு 100 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

மூன்றாவது எதிரியான க. கணபதிப்பிள்ளை அல்லது சூடாமணி என்பவருக்கு முதல் குற்றத்துக்கு 150 ரூபாய் அபராதமும் இரண்டாவது குற்றத்துக்கு 100 ரூபாயும் அபராதம் விதிக்கப்பட்டது.

இரண்டாவது எதிரி சுகவீனமாக இருப்பதால் அபராதத் தொகையைச் செலுத்துவதற்கு இம்மாதம் 27-ந்திகதிவரை அவகாசம் அளிக்கப்பட்டது. 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுன்னாகத்திலிருந்து ஊர்வலம் நடத்தியதாக இவர்கள் மீது பொலிசார் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

எதிரிகள் தரப்பில் புரக்டர் ஏ. அன்ரனியின் அநுசரணையுடன் வழக்கறிஞர் கே. ஏ. வைகுந்தவாசன் ஆஜரானர்.

## சங்கானை பட்டினசபை புதிய தலைவர்

சங்கானை. ஞாயிறு

சங்கானைப் பட்டினசபையின் புதிய தலைவராக 7-ம் வட்டார அங்கத்தவர் திரு. சின்னையா ஆறுமுகம் இன்று முற்பகல் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு. சின்னத்தம்பி வைரமுத்து உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. கே. ஏ. ஜாசப் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தலைவர் பதவிக்கு திரு. சின்னையா ஆறுமுகத்தின் பெயரை திரு. சின்னத்தம்பி வைரமுத்து பிரேரிக்க 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. கந்தையா இராமலிங்கம் அனுவதித்தார். வேறு எவரதுபெயரும் பிரேரிக்கப்படாததால் திரு. சின்னையா ஆறுமுகம்தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## 'ஈழநாடு' பிந்தியபதிப்பு

13 - 1 - 69

யாழ்ப்பாண நகரில் நண்பகலில் வெளியாகும் 'ஈழநாடு' பிந்திய பதிப்பு இன்று [திங்கட்கிழமை] யாழ் நகர மேயர் தேர்தல்செய்தியுடன் பிற்பகல் 4மணிக்கு யாழ்ப்பாண நகரில் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

### கல்வி

1969 பங்குனி, மார்கழி க. பொ. த. பரீட்சைகளுக்காக பட்டதாரி ஆசிரியர்களால் உயிரியல், பௌதிகம், இரசாயனம், தூயகணிதம், பிரயோக கணித பாடங்களுக்குக் காலை மாலை வகுப்புக்கள் நடக்கின்றன. வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 473

1924-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட வர்த்தகக் கல்லூரியில் கலை, விஞ்ஞான, வர்த்தக பாடங்கள், 1969 பங்குனி பரீட்சைக்குரிய விசேட வகுப்புகளும் மார்கழி க. பொ. த. சாதாரண/உயர்தர பரீட்சைக்குரிய வகுப்புக்கள் நடக்கின்றன. இரு பாலாருக்கும் விடுதி வசதியுண்டு. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 474

### கல்வி

பருத்தித்துறையில் திருமதி கமலா கிருஷ்ணமூர்த்தி (சங்கீத பூஷணம்) அவர்களால் 20-1-69 முதல்வீணை வகுப்பு ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. சேர விரும்புவோர் விண்ணப்பிக்கலாம். விபரங்கட்கு: திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 'பாலராஜேஸ்வாசா' ஓராங்கட்டைச் சந்தி, பிரதானவீதி, பருத்தித்துறை. தொலைபேசி: 578. 479

கிராமபோன் தட்டுகளின் உதவியுடன் ஆங்கில, சிங்கள பாடங்கள் குறுகிய காலத்தில் சிரமமின்றிப் பேச; எழுதக் கற்பிக்கப்படும். திருமகள் புத்தக சாலை, நெல்லியடி. 467



இன்று மட்டும்
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
**தங்கத் தம்பி**

**மனோஹரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி:- 6-30-9-30
ஜெமினி-எஸ்.வி.சுப்பையா
வனஜா-சுந்தரிபாய்
சகஸ்ரநாமம்-லலிதா
நடித்த
**வள்ளியின் செல்வன்**
கலரி 35 சதம்

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
**எம். ஜி. ஆர். - ஜெயலலிதா**
நம்பியார், அசோகன், நாகேஷ்
நடித்த
**ரகசியப்பொலிஸ் 115**
(ஈஸ்ட்மென்ட் கலர்)

உலகில் பிரசித்திபெற்ற இடங்களில் படமாக்கி ஓடி வெற்றியீட்டி கொழும்பில் 23 வாரங்களுக்கு மேல் ஓடிக்கொண்டிருக்கும் அனேகரின் பாராட்டைப் பெற்ற மகத்தான **ஹிந்தி வர்ணச்சித்திரம்**
யாழ். மக்களின் அன்பு பொங்க
**பொங்கல் விருந்தாக**
**வெலிங்டன்** யாழ் நகர்
தினசரி 1-30, 6-00 9-30 மணி



ராஜ்கபூர், வைஜயந்திமாலா
ராஜேந்திரகுமார்
நடித்த
ராஜ்கபூரின்
**சங்கம்**
(ரெக்னிக் கலர்)
இசை: சங்கர் ஜெய் கிஷன்

**5—வது வாரம்**
கிங்ஸ்லி (கொழும்பு)
சிவாஜி — தேவிகா
நடித்த
**நீலவானம்**


## சைவப்பிரகாச மடாலய

கோப்பாய், ஞாயிறு

''நாவலர் பெருமானால் சைவமும், தமிழும் வளர்வதற்காகஅத்திபாரச்சொத்தாக எழுதிவைத்த, நல்லூரிலுள்ள நாவலர் சைவப்பிரகாச மடாலயத்துக்குரிய காணியை அரசாங்கம் உடனடியாகப் பொதுமக்களிடம் திரும்பவும் கையளிப்பதற்கேற்ற நடவடிக்கைகளை தமிழ் எம். பி.க்கள் எடுக்க வேண்டும்.''

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் நடாத்தப்பட்ட விசேஷ கூட்டமொன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பெரியபுராண போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை சேக்கிழார் மன்றம் நடத்தும் பெரியபுராண போட்டிப் பரீட்சை இவ்வாண்டு மார்ச் மாதம் முதலாவது போயா தினத்தில் நடைபெறவிருக்கிறது. இப் பரீட்சைக்கு தோற்றுவோர் இம்மாதம் 30-ந் திகதிக்கு முன்னர் மனுச்செய்ய வேண்டுமென்றும் இம் மனுப் பத்திரங்களை மன்றச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமெனவும் அறிவிக்கப்படுகிறது. —

தமிழரசுக்கட்சி

## தேசிய மாநாட்டு வரவேற்புக்குழு

கோப்பாய், ஞாயிறு

ஏப்ரல் 7-ம், 8-ம், 9-ம் தேதிகளில் உடுவில் தொகுதியில் நடைபெறவிருக்கும் தமிழரசுக்கட்சியின் 11-வது தேசிய மாநாட்டின் வரவேற்புக்குழுவாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி, தர்மலிங்கம் எம்.பி., செயலாளர்கள்: திரு. முத்துலிங்கம், திரு. என். அருணாசலம், தனாதிகாரி: திரு. சி. கதிரவேலுப்பிள்ளை எம். பி., மாநாட்டு கலை நிகழ்ச்சிப் பொறுப்பாளர்: திரு. எம், ஆலாலசுந்தரம்.

## வைத்தியநாதன் வீதி

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கும் இருபாலைச் சந்திக்கும் இடைப்பட்டுள்ள பழைய தெருவுக்கு 'சேர் வைத்தியநாதன் வீதி' என பெயர் சூட்டுமாறு கோப்பாய் திருவருள் தவநெறி மன்றம் கோப்பாய் கிராம சபையைக் கோரியுள்ளது.


**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**என் தம்பி**

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
எம். ஜி. ஆர். - விஜயா
நடித்த
**விவசாயி**

இன்று மட்டும்
மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6 30, 9-30
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**ஆலய மணி**


# 'விசுவமடு விவசாயப்படை முதலிடம் வகிக்கிறது'

## கிளிநொச்சி காரியாதிகாரி புகழ்மாலை

அளவெட்டி, ஞாயிறு

''இலங்கையில் அமைக்கப்பட்ட விவசாயப்படை முகாங்களில் விசுவமடு விவசாயப்படை வீரர்களே உணவு உற்பத்தியைப்பெருக்க தக்கதாக நீர்ப்பாசன வசதிகளை செய்தார்கள்.''

கிளிநொச்சிக் காரியாதிகாரி திரு. திருலோகநாதன் விசுவமடு விவசாயப்படை முகாம் வீரர்களின் வருடாந்த விளையாட்டுவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு பேசினார்.

இவ்விழாவில் கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. சுப்பிரமணியம் கிளிநொச்சி எம்.பி. திரு. கா.போ.ரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விழா ஆரப்பத்தில்விவசாயப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை முகாம் அதிபர் திரு. கணேசன் ஏற்று கொடியேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

திரு, லோகநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

விவசாயப்படை வீரர்கள் அரசாங்கத்துக்கு விசுவாசமாகவும் கட்டுப்பாடுடனும் கடமையாற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். விசுவமடுவிவசாயப்படை வீரர்கள் மற்ற முகாம்களிலும் பார்க்க உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு உகந்தமுறையில் நீர்ப்பாசன வேலைகளைச் செய்துவருகிருர்கள். இப் படையின் சேவை மற்றைய படைகளின் சேவையிலிருந்து வேறுபட்டதாகவும், நாட்டுக்கு நன்மையளிப்பதாகவும் இருப்பது போற்றக்கூடியது.

## கட்டிடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர்சங்கிலியன் மன்றத்தினரின் புதுக் கட்டிடத்தை வருகிற பொங்கலன்றுமாலை உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் திறந்துவைப்பார். காலஞ்சென்ற சிவநெறிக் காவலர் த. முத்துக்குமாரசாமியின் உருவப் படத்தை முன்னாள் செனட்டர் எஸ். ஆர் கனகநாயகம் திரைநீக்கம் செய்து வைப்பார். இவ் விழாவில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு, தனபாலசிங்கம் செல்வி புஷ்பா செல்வநாயகம், பண்டிதர்இராமச் சந்திரன் உட்பட பலர் பேசுவர்.

[கா.நி]

## மகாநாடு

சித்தங்கேணி, ஞாயிறு

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் மகாநாடு இம் மாதம் 16ந் திகதி யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இம்மகாநாட்டில் யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசத்தின் முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படவுள்ளது.

இம்மாதம் 29ந் திகதி மேற்படி சமாச விழாவை நடாத்துவது சம்பந்தமாகவும் ஆராயப்படும். உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா 29ந் திகதிய விழாவில்கலந்துகொள்வார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 13—1—69

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகிதங்கள்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ அன் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு, 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 தாளவாத்தியக்கச்சேரி, 10-00 நேயர்விருப்பம்.

## 8-வ ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொக்குவில் மேற்கு சனசமூகநிலைய 8-வது ஆண்டு விழா இம்மாதம் 14-ம்திகதி பொங்கலன்று கொக்குவில் மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கக் கட்டிடத்தில் நடைபெறவிருக்கிறது.

ஊர்காவற்றுறை எம். பி. திரு வி.நவரத்தினம் செனட்டர்நீதிராசா கொக்குவில் கோண்டாவில் கிராமசபை தலைவர் திரு. க. சபாபதி உட்பட பலர் பேசுவர்.

— ]ந.நி]

## நீதியரசருக்கு அனுதாப

யாழ்ப்பாணம், திங்கள்

காலஞ்சென்ற நீதியரசர் திரு பொன் ஸ்ரீஸ்கந்தராசாவின் மரணம் குறித்து நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட நீதிபதி ஜனாப் ஐ. எம் இஸ்மயில் தலைமையில் வழக்கறிஞர்கள் கூடி தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்தனர்.

## 'சியவச'

சித்தங்கேணி, ஞாயிறு

கல்வி இலாகாவால் இவ்வருட நடுப்பகுதியில் கொண்டாடப்படவிருக்கும் கல்வி நூற்றுண்டுவிழாவையொட்டி வலி-மேற்குப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் 'சியவச' டிக்கெட்டுகள் தீவிரமாக விற்பனையாகின்றன. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில், அதிபர் ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று இதுபற்றிக் கூறிவருகிருர்.


## விற்பனைக்கு

றம்ஸ் (Drums), பழைய பத்திரிகைகள், சிலின்டர் சேஸ் (Cylinder Chases), பழைய இரும்புகள், பழைய பைப்புகள் விற்பனைக்குண்டு.

''ஈழநாடு'' காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
''ஈழநாடு'' லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

1146


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்டான் ராணுவ நிலைகள்மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

அம்மான், ஜன. 12

## ஜோர்டான் ராணுவ நிலைகள்மீது இஸ்ரேலிய விமானங்கள் நேற்று இருதடவைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

ஜோர்டான் கொரில்லா படையினர் முகாம்களைத் தேடிச்சென்று இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளனவாம். ஜோர்டான் நதியின் வடபகுதியிலுள்ள பள்ளத்தாக்கில் நேபாம் குண்டுகளை இஸ்ரேலிய விமானங்கள் வீசியதாக ஜோர்டான் அதிகாரிகள் கூறினார்கள்.

இஸ்ரேலியரோந்துமுகாம்கள் மீது ஜோர்டான் 'கொமாண்டோ' படையினர்நடத்திய தாக்குதலுக்கு பதில் நடவடிக்கையாகவே இஸ்ரேலிய விமானங்கள் ஜோர்டான் கொரில்லா நிலைகள்மீது குண்டுவீசியதாக இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தத்தாக்குதல் பற்றிய சேதங்கள் அறிவிக்கப்படவில்லை.

ஜோர்டான் நதியிலுள்ள அப்துல்லா பாலத்துக்கு அருகில் இரண்டாவது தாக்குதல் நடைபெற்றது. இஸ்ரேல் ரோந்து வாகனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர் நடவடிக்கையாக இந்த எதிர்த் தாக்குதல் இடம்பெற்றதாம். இதில் ஒரு இஸ்ரேலியர் காயமடைந்ததாகவும் இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## மேற்காசிய அமைதிக்கு ரஷ்யத் திட்டம்

மேற்காசிய அமைதிக்கு ரஷ்யா தெரிவித்துள்ளதிட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக ஐ.நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் மேற்காசிய அமைதிக்கான முயற்சிகளில் யுதாண்டின் விசேஷப் பிரதிநிதி குணர்ஜாரிங்கும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

மேற்காசிய அமைதிக்கு ரஷ்யா தெரிவித்துள்ள யோசனைக்கு அமெரிக்கா விரைவில் பதிலளிக்கவிருப்பதாகத் தெரிகின்றது. ரஷ்ய யோசனை பற்றி மேலும் விளக்கங்கள் கோரி அமெரிக்கா பதில் அனுப்பும் என்று தெரிகின்றது.

மேற்காசிய அமைதிக்கு ரஷ்யா தெரிவித்துள்ள திட்டத்தின் விபரம் பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா போன்ற எல்லா வல்லரசு நாடுகளுக்கும் தெரிவிக்கப் பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

நியூயோர்க்

## ஆசிய சங்கத்தின் சுற்றுலா ஏற்பாடு

நியூயோர்க், ஜன, 12

இங்குள்ள ஆசிய சங்கம் இரண்டாவது ஆசிய சுற்றுலாவுக்கான ஆயத்தங்களைச் செய்கின்றது. ஜனவரி 17ம் திகதி ஆரம்பிக்கும் இச்சுற்றுலா பெப்ரவரி 20ம் திகதியன்று முடிவடையும்.

இலங்கை, தென் இந்தியா இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் காட்சிக்கலை, மேடைக்கலை போன்றவற்றை சுற்றுலாவில் இடம் பெறும் உறுப்பினர்கள் கண்டு களிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இக்குழுவில் புராதன கலைச் சின்னங்களைச் சேகரித்து வைத்திருப்பவர்களின் இல்லங்களையும்அவர்கள்சென்று பார்ப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

## ஈரான் மன்னரின் சமரச முயற்சி

### பாகிஸ்தான் வரவேற்பு

ராவல்பிண்டி, ஜன. 12

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் சமரசம் செய்துவைக்க ஈரான் மன்னர் முன்வந்திருப்பதை பாகிஸ்தான் வரவேற்றிருப்பதாகத் தெரிகின்றது.

இருநாடுகளுக்கிடையிலுள்ள பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டு மற்ற விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டுமென்று அண்மையில் புதுடில்லியில் ஈரான் மன்னர் ஷா என்ஷா கருத்து வெளியிட்டிருந்தார்..

இருநாடுகளுக்குமிடையில் சமரசம் செய்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டால் தாம் அந்த முயற்சியில் ஈடுபடத் தயாராய் இருப்பதாக ஈரான் மன்னர் கூறியிருந்தார். இந்தக் கருத்துக்கு புதுடில்லியில் எதுவித அபிப்பிராயமும் தெரிவிக்கப்படவில்லை.

காமன்வெல்த்

### பிரதமர்கள் மகாநாடு

லண்டன், ஜன. 12

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டுக்கு வந்துள்ள பிரதிநிதிகள் மாகாநாட்டில் இடம்பெற்ற விஷயங்கள் பற்றிய இறுதி அறிக்கையைத்தயாரிப்பது பற்றி நேற்று கூடிப் பேசினார்கள். நகல் அறிக்கையொன்றை அவர்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில் பிரிட்டிஷ் பிரதமமந்திரி திரு. வில்சனை காமன்வெல்த் பிரதமர்கள் தனிப்பட்டமுறையில் சந்தித்துப் பேசுவதிலும் இறங்கியுள்ளனர்.

நாளைக்கு மீண்டும் ... மார்கள் கூடி ...

## கொஸிஜின் அஞ்சலி

மாஸ்கோ, ஜன. 12

முன்னாள் பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி உயிர்நீத்த இடத்தில் நேற்று சோவியத் பிரதம மந்திரி திரு. கொஸிஜின் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுடன் பேச்சு நடத்துவதற்காக ரஷ்யாவிலுள்ள தாஷ்கன்ட் நகருக்கு சென்றிருந்தபொழுது திரு. லால்பகதூர் சாஸ்திரி அங்கு திடீரென மரணமானார்.

## ஒருவர் கொலை

புதுடில்லி, ஜன. 12

பட்னாவுக்கு மேற்குப் பகுதியில் ஒரு ரெயில்வே நிலையத்தின்மீதும் ரயில்கள்மீதும் பிரயாணிகள் கற்களை வீசி ஆர்ப்பாட்டம் செய்த பொழுது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

பிரயாணிகள் டிக்கட் சம்பந்தமாக எழுந்த தகராறில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்ததாம்.

## இன்னும் இல்லை

பாரிஸ், ஜன. 12

வியட்னும் அமைதிக்காக பாரிஸ் பேச்சுகளை ஆரம்பிப்பது பற்றி நேற்று மீண்டும் இருதரப்பு அதிகாரிகளும் கூடிப் பேசினார்கள். ஆனால் எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

### பிணையில் விடுதலை

உருத்திரபுரம், சனி

உருத்திரபுரம் அடம்பன் காட்டில் கம்பி களவாடிய வழக்கில் கந்தையா கந்தசாமி என்பவரை 200ரூபா பிணையில் செல்லும்படியும் மீண்டும் 26ல்ஆஜராகும்படியும்நீதிபதி உததரவிட்டார்.

## பெயரளவில் தான் கம்யூனிஸ்ட் நாடு

### சீனு பற்றி 'பிராவ்டா' வர்ணனை

மாஸ்கோ, ஜன. 12

சீனு பெயரளவில்தான் கம்யூனிஸ்ட் நாடாகவிருக்கிறது என்று சோவியத் பத்திரிகையான 'பிராவ்டா' கருத்துவெளியிட்டிருக்கின்றது.

பெயரளவில் கம்யூனிஸ்ட் நாடென்று கூறிக்கொண்டு கம்யூனிஸ்ட் கொள்கைகளுக்கு மாருகவே நடப்பதாக மா சே துங்கை பிராவ்டா கண்டித்திருக்கிறது.

மாவோ ஆதரவாளர்களின் வெறிபிடித்த ராணுவஆட்சி அங்கு ஏற்பட்டிருப்பதாகவும் பிராவ்டா கூறியுள்ளது.

துப்பா கிமுனையில்

### நான்காவது விமானம்

நியுயோர்க், ஜன. 12

மேலும் ஒரு பிரயாணிகள் விமானம் பலவந்தமாக கியூபாவுக்குள் இறக்கப்பட்டுள்ளது. 120பிரயாணிகளுடன் மியாமிக்கு வந்துகொண்டிருந்த விமானத்தை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி ஹவானுவில் இறங்கச் செய்தாராம் வாலிவர் ஒருவர். புதுவருடத்துக்குப் பின்னர் இது நான்காவது சம்பவம். விமானம் பின்னர் அமெரிக்காவுக்குத் திரும்பியதாகவும், பிரயாணிகளைக் கொண்டுவரவேருெரு விமானம் அனுப்பப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இராஜஸ்தான்

### முன்னாள் கவர்னர் மரணம்

காசி, ஜன. 12

இராஜஸ்தான் முன்னை நாள் கவர்னரும், உத்தர பிரதேஷ் முதன் மந்திரியுமான டாக்டர் சம்புகானந் தமது 78 வது வயதில் வெள்ளிக்கிழமையன்று காலமானார். காங்கிரஸ் கட்சியின் முக்கிய அங்கத்தவரான இவர் இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியமும் மொழிகளில் அரசியல், தத்துவம் ஆகியன பற்றி எழுதுவதில் சிறந்த பாண்டித்தியம் உடையவர்.

வட அயர்லாந்தில்

### மோதல் 20 பேர் காயம்

லண்டன், ஜன. 12

வட அயர்லாந்தில் சிவில் உரிமை ஆர்பாட்டக் காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் ஏற்பட்ட ஒரு மோதலில் குறைந்தது 20 பேராவது காயமடைந்திருப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 5 பொலிசாரும் காயமடைந்துள்ளனர். ஆர்ப்பாட்டக் காரர்களில் பெரும்பாலானவர்கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்களாம்.

### நாடக விழாவில் பேச்சு

பம்பலப்பிட்டி, ஞாயிறு

''சைவாலயங்கள்எங்கெல்லாம் சிறப்புடன் அமைந்திருக்கிறதோ அங்கெல்லாம் சைவசமயம் விரிந்து பரந்து வளர்கிறது. ஆலயப் புனருத்தாரணத்தால் சைவ சமயம் புத்துயிர்பெறுகிறது. ஈழத்தில் வரலாற்றுப் பெருமை பெற்ற ஆலயங்களுள் காரைநகர் சிவன்கோவிலும் (ஈழத்துச் சிதம்பரம்) ஒன்ருகும். சிதம்பரம்செல்ல முடியாத பக்தர்கள் ஈழத்துச்சிதம்பரத்துக்கே செல்லுகின்றனர். பல லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இவ்வாலயப் புனருத்தாரணம் வெகு விரைவில் நடந்தேறவேண்டும்.''

இவ்வாறு திரு. சு. சர்வானந்தா, காரைநகர் சிவன் கோவில் திருப்பணி நிதிக்காக நடைபெற்ற நாடக விழாவிற்கு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## குள்ளமானவர்களை வளரச்செய்ய முடியுமாம்

### சோவியத் ஆராய்ச்சியில் கண்டு பிடிப்பு

மாஸ்கோ, ஜன 12

உலகில் பிறப்பவர்கள் எல்லாம் ஒரே உயரமுடையவர்களாக இருப்பதில்லை. சிலர் அளவுக்கு மீறிவளர்கிருர்கள். சிலர் குள்ளமாக உள்ளனர். இது ஏன்? குள்ளமானவர்களை டாக்டர்களால் வளரச் செய்ய முடியுமா? ஆம் முடியும், அந்த நாள் விரைவில் வரும் என்ருர் காமியான்ஸ்கி, இவர் மருத்துவத்துறையில் மாஸ்டர்பட்டம் பெற்றவர்.

ரஷ்ய ஜார் முதலாவது பீட்டர் ஒரு மிக உயரமான மனிதர். அவர் மிக அதி உயரமுள்ள சிப்பாய்களையே விரும்பினர். அவருடையபிரியா பிராஷென்ஸ்கி படைப்பிரிவின் வல ... முதல் சிப்பாயின் உயரம் 6அடி 6 அங்குலம். அந்த மனிதன் இறந்தபோது ரஷ்யாவின் முதலாவது இயற்கை வரலாற்று பொருட் காட்சி சாலையான குந்ஸித காமரில் காட்சிக்கும் பொருட்டு அவனுடைய எலும்புக் கூட்டை கொண்டு வரும்படி உத்தரவிட்டார். இரண்டு நூற்ருண்டுக்குப் பிறகு அந்தப்படை வீரனின் எலும்புக் கூட்டை சோவியத் எலும்பு நோய் அறிஞர்கள் ஆராய்ந்தனர். இந்த எலும்பை எக்ஸ்ரே மூலம் ஆராய்ந்த போது அந்தச் சிப்பாயின் ராட்சத வளர்ச்சி ஒருவகை நோயினல் ஏற்பட்ட வளர்ச்சி என்று தெரியவந்தது.

வளர்ச்சி அதிகமான உயரம் வளர்வது உடல்நோய் அம்சமாகும். இது மூளையிலுள்ள பிட்யூட்டரிச் சுரப்பியான ஹைபோபிசிஸின் நடவடிக்கை அதிகரிப்பதினுல் ஏற்படுவதாகும்.

மூளையிலுள்ள இந்தச் சின்னஞ்சிறிய, ஆனல் மிகமுக்கியமான சுரப்பியின் வேலையைக் கட்டுப்பாடாக முறைபடுத்தும் வழியைக் காண டாக்டர்கள் முயன்று வருகின்றனர். ஏனெனில் இதனுல் ஏற்படும் அந்த வளர்ச்சியை பெரும்பாலும் உயிரினத்தில் பல்வேறு செயல்படாத தன்மைகளை உருவாக்குகின்றன. அதீத உயரமுடையோர் கணக்கற்ற அளவு உடல் வலுவுடன் இருப்பர் என்று பரவலான நம்பிக்கை நிலவுவது தவருனதாகும். சாதாரணமான உயரமுடையவர்களைக் காட்டிலும் இவர்கள் குறைவான ஆரோக்கியமுடையவர்கள் அல்ல.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 'ஈழநாடு' காரியாலயத்துக்கு நாளை (14-1-69) செவ்வாய்க் கிழமை விடுமுறையாதலால் (15-1-69) புதன் கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணிவாக்கு

இயற்கை, விஞ்ஞானம் வியக்கத்தக்க வகையில் முன்னேறியிருக்கிறது. இருப்பினும் இயற்கை ரகசியங்களைப்பற்றி நமக்கு எதுவுமே தெரியாது என்பதைத் தான் இந்த முன்னேற்றம் நமக்கு அறிவுறுத்துகிறது; இவ்வாறு நம்மைப் பணியவைக்கிறது.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna
Post Box- 49, Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மார்கழி மாதம் 30-ந் திகதி
(13-1-69)


## யாழ். நகரின் மேயர்

யாழ்ப்பாணநகருக்கு புதிய மேயர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக யாழ்ப்பாண நகர மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள இருபத்திமூன்று அங்கத்தவர்களும் இன்று பிற்பகல் கூடுகின்றனர். சுமார் இரண்டரைமூன்று வருடங்களின்பின் மக்களின் பிரதிநிதிகள் இன்று கூடுகின்றனர். தங்களுக்குள் ஒருவரை நகரின் முதல்வராகத் தெரிவு செய்யும்கடமையை அவர்கள் இன்று நிறைவேற்ற வேண்டும். இப்போதுள்ள நிலையில் மேயர்பதவிக்குப் பலத்த போட்டியிருப்பதாகவே தோன்றுகிறது.

கட்சி, கோஷ்டி அடிப்படையிலேயே மேயரைத் தெரிவு செய்வதற்கான முயற்சி நடைபெற்றுவருகிறது. இன்றுமாலைக்குள் யார் மேயர் என்பதுதெரிந்துவிடும். முன்னெப்போதுமில்லாத முறையில் சில அரசியல் கட்சிகளும் இம்முறை மேயர் தெரிவில் அக்கறைகொண்டுள்ளன. மாநகரசபைத்தேர்தல் நடந்துமுடிந்த நாளிலிருந்து நடைபெற்றுவரும்முயற்சிகளைப்பார்த்தால், கட்சி நலன், கோஷ்டிநலன், தனிப்பட்டோர் நலன் ஆகியவை தான் முக்கியமாகக் கருதப்படுகிறதேயொழியநகரின் நலன் பெரிதாகக் கருதப்படுவதாகத்தெரியவில்லை.

யாழ்.மேயர் தெரிவு பற்றி பல தடவைகளிலும் இதே பத்தியில்நாம் எமது கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறோம். மீண்டும் மீண்டும் இதுபற்றி எழுதி வாசகர்களின் பொறுமையைச்சோதிக்க நாம் விரும்பவில்லை. ஆயினும்ஒருவார்த்தை. கட்சி, கோஷ்டி, சொந்த நலன்களை ஒரு புறத்தில்ஒதுக்கிவிட்டு நகரின் நலனையும் நகர மக்களின் நலனையும் மட்டும் கருத்தில் கொண்டு அறிவும் ஆற்றலும் நேர்மையும் உள்ள ஒருவரை யாழ். நகரமேயராக, ஏகமனதாகத் தெரிவுசெய்து, நகரின் பெருமையையும்உயர்த்த வேண்டும்.

## கொள்ளை லாபமில்லையா?

தட்டுப்பாடான பொருள்களைப் பதுக்கி வைப்பதும், கட்டுப்பாட்டு விலையைவிட ஒரு சதம் கூடுதலாக விற்பதும் கடும் தண்டனைக்குரிய குற்றங்களாக அரசாங்கம் கருதுகிறது. ஒரு றாத்தல் பாணின்கட்டுப்பாட்டுவிலையைவிட ஒரு சதம் கூடுதலாக விற்றவருக்கு எத்தனையோ ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுபோன்ற செய்திகள் நாடறிந்தது. கொள்ளைலாபம் அடிப்போர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பதுக்கலையும் கொள்ளை லாபத்தையும் தடுக்கவே வேண்டும்.

அரசாங்கமே இந்தக் குற்றத்தைச் செய்வதானால் மற்றவர்களை என்ன சொல்வது; எப்படித்தடுப்பது?

உள்நாட்டில் ஜவுளி உற்பத்தியை அதிகரிக்கவும் ஜவுளியில் சுயதேவைப் பூர்த்தியடையவும் ஆயிரம் நெசவு நிலையங்களை நாட்டின் பல பகுதிகளிலும் உள்நாட்டமைச்சர் நிறுவினார். துணிகளுக்காக வெளிநாடுகளை எதிர்பார்க்க வேண்டியதில்லையென்றும் காஞ்சீபுரம், காஷ்மீர், மணிப்புரி சேலைகளை அணியும் பெண்களைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் உள்நாட்டமைச்சர் பொதுவைபவங்களில் பேசிவந்தார். நெசவு ஆலைகளை நிறுவியதன் மூலம் வேலையில்லாப் பிரச்னையும் குறைந்துவிடுமென்றார். அமைச்சரின் திட்டமும் யோசனையும் நல்லதுதான்; மக்களும் வரவேற்றார்கள். நெசவுத் தொழிலிலும் பலர் ஆர்வம் காட்டினார்கள். அழகான சேலைகள் சிலவும் இங்கு உற்பத்தி செய்யப்பட்டன, மக்கள் மகிழ்ச்சியும் பெருமையுமடைந்தார்கள். ஆனால் ஆரம்பிக்கப்பட்ட நெசவு நிலையங்கள் பல இடங்களிலும் படிப்படியாக மூடப்பட்டுவருவதாகச் செய்திகள் வெளிவருவது கண்டு யாரும் மகிழ்ச்சியடையமுடியாது. நெசவு நிலையங்கள் மூடப்படுவதற்கான காரணம் என்ன?

ஜவுளி உற்பத்திக்குத் தேவையான நெசவுநூல் இறக்குமதி செய்யப்படுகிறது. நூல் இறக்குமதி தாமதமானால் நெசவாளருக்கு வேலை இல்லை. இறக்குமதியில் தட்டுப்பாடு ஏற்பட்டால் நெசவுக்குத்தேவையான நூல் கிடைக்காது. இவைதவிர இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு தொன்நெசவு நூலுக்கும் அரசாங்கம் ஆறுயிரம்ரூபாய் இலாபம் வைக்கிறதென்றும் இதனால் உள்நாட்டில் ஜவுளி உற்பத்திச் செலவு அதிகரிக்கிறதென்றும் இதனால் உற்பத்திசெய்யப்பட்ட ஜவுளிகளை விற்க முடியாமலிருப்பதாகவும் அகிலஇலங்கை நெசவாளர்சங்கச்செயலாளர், கைத்தொழில் அமைச்சருக்குச் சரியாக எடுத்துக் காட்டியிருக்கிறார். நெசவுநூல் விற்பனையில் அரசாங்கம் பெருந்தொகையான இலாபம் தேடும் செயலினால் நாற்பதாயிரத்துக்கதிகமான நெசவாளர்கஷ்டமடைவதுடன் நெசவுத்தொழிலும் பாதிக்கப்படுகிறது.

நெசவுநூல்விற்பனையில் இவ்வளவு தொகையான இலாபம் வைப்பதானால் அது நியாயமாகாது. உள்நாட்டில் பருத்தி உற்பத்திக்கு ஊக்கம் அளித்து நூலை இங்கு உற்பத்திசெய்ய திட்டமிட்டு செயலாற்ற அரசாங்கம் முன்வரவேண்டும். அதுவரை இறக்குமதிசெய்யப்படும் நூலில் அதிக இலாபம் தேடுவதை நிறுத்தி நெசவாளரின் கஷ்டங்களைக் குறைப்பதுடன் உள்நாட்டு ஜவுளி உற்பத்திக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கவேண்டியது அவசியம்.

# ஆசிரியருக்கு கடிதங்கள்

## நோயாளர் அவதி: கவனிப்பார்களா?

கோப்பாய்அரசினர் வைத்தியசாலையில் 1967-ம் ஆண்டிலும் பார்க்க, சென்ற வருடம் தொடக்கம்நோயாளர்கள் தொகை அதிகரித்துள்ளது. நாலாபக்கங்களிலிருந்தும் நோயாளிகள் ஏராளமாக வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு ஒரு டாக்டர் மட்டுமே பணிபுரிகிறார். வைத்தியசாலையில் தொழிலாளர்களின்தொகை குறைவாக விருப்பதனாலும் இடமாற்றம் பெற்றுச் சென்ற டாக்டரின் இடம் நிரப்பப்படாததாலும் இங்கு செல்லும் நோயாளிகள் கஷ்டமுறவேண்டியுள்ளனர். மேலும் ஒரு டாக்டரை அனுப்பி இங்கு நிலவும் கஷ்டத்தை சம்பந்தப்பட்டவர்கள் நிவர்த்தி செய்வார்களா?

மு. ஆறுமுகசாமி.
புத்தூர்.

0 0 0

## இதுதான் நடந்தது.

11-1-69-ந் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் 'மறைந்தனராம்' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி சரியல்ல.

1969-ம் ஆண்டுக்கான வேலணைக் கிராமசபையின் வரவுசெலவுத்திட்டம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின் அறிக்கை நிராகரிக்கப்பட்டது. ஐந்து அங்கத்தவர்கள் எதிர்த்தும் மூன்று அங்கத்தவர்கள் ஆதரித்தும் வாக்களித்தனர். ஒன்பது அங்கத்தவர்களைக்கொண்ட இக்கிராமசபையில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது ஒருவர் சமுகமளிக்கவில்லை.

பு. சுப்பிரமணியம்.
அக்கிராசனர்
கிராமசபை,
வேலணை.

## அச்சுவேலி செய்திகள்

அச்சுவேலி, ஞாயிறு

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இவ்வருடத்திலிருந்து இந்து ஆராதனை தினந்தோறும் காலைமாலைகளில் இடம்பெற்றுவருகின்றது. இதற்கேற்ற ஒழுங்குகளை வித்தியாசாலை சைவ ஆசிரியர்சங்கத்தினர்செய்து வருகின்றனர்,

0 0

அச்சுவேலி சென் திரேசா பாடசாலை இதுகாலவரையில் சிறு ஆண் பிள்ளைகள் பயின்றதினால் கலவன் பாடசாலையாகவே நடைபெற்று வந்தது. வித்தியாபகுதியினரின் புதிய ஒழுங்கின்படி 6-ம் வகுப்பும் அதற்கு 7மற்பட்ட வகுப்புகளுமே இவ்வாண்டில் இருந்து நடைபெற இருக்கிறது. 7,ம் வகுப்பிற்குக் கீழ்ப்பட்ட வகுப்புக்கள் யாவும் அச்சுவேலி ஸ்தானபாடசாலையில் இடம்பெறவிருக்கின்றன. மகளிர் மட்டுமே இங்கு கல்விபெறும் வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது, இவ்வருடத்திலிருந்து இப்பாடசாலை மகளிர்பாடசாலையாக அமையும்.

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இவ்வருடம் தை மாதம் தொடக்கம் 8-ம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுமே தொடர்ந்திருக்கும். 7-ம் வகுப்பும் அதற்குக்கிழ்உள்ள வகுப்புகளும் அச்சுவேலி மகாவித்தியாலயத்துக்கு அருகில் உள்ள ஸ்தானபாடசாலையோடு இணைப்ன்றன.

கல்லூரிகளின் புதியஒழுங்கின்படி அச்சுவேலி மகாவித்தியாலயம் ஆண்கள் கல்லூரியாகவும் அச்ரிவேலி செளிதிரேசா பாடசாலை மகளிர்கல்லூரியாகவும் ஸ்தான பாடசாலை கலவன்பாடசாலையாகவும் அமைகின்றன.

## ஆண்டுவிழா

சுழிபுரம், ஞாயிறு

பண்ணாகம் தெற்குஸ்ரீ முருகன் சனசமுக நிலையத்தினர் தமது நிலையத்தின் ஆண்டுவிழாவை இம்மாதம் 21-ந் திகதி நடத்தவிருக்கின்றனர்.

## கி. ச. நிலைய சமாச விழா

அளவெட்டி, ஞாயிறு

யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாச விழாவை நடாத்துவது பற்றி ஆராய இம்மாதம் 16-ந் திகதி மாலை 2 மணிக்கு யாழ். நகர மண்டபத்தில் ஒரு மகாநாடு நடைபெறும்.

இம்மகாநாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிட்டர்ஸும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அ. சு. யோசேப், காரியாதிகாரிகள், சனசமூகநிலையப் பிரதிநிதிகள், உள்ளூராட்சித்தலைவர்கள் ஆகியோடும் கலந்துகொள்வார்கள்.

## அபராதம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலையைச் சேர்ந்த இருவர் சட்ட விரோதமாக அனுமதியின்றி மாட்டிறைச்சி வெட்டியதாக சங்கானைப் பொலிசார் அவர்களை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம்முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொள்ள நீதிபதி அவர்களுக்குத் தலா 10ரூபா அபராதம் விதித்தார்.

## 'தமிழ் பண்டிதர்களுக்கு சமசம்பளம் வேண்டும்'

### சம்பள நிர்ணயசபையிடம் கோரிக்[கை]

பருத்தித்துறை, ஞாயிறு

''பல்கலைக்கழகத்தில் மூன்றாண்டுகள் பயின்று வெளியேறும் பட்டதாரிகளிலும் பார்க்க தமிழ்ப்பண்டிதரின் கல்வியறிவோ, பாட விதானமோ, தமிழறிவோ எவ்விதத்திலும் குறைந்ததல்ல. தேசீய கல்விச்சபை உருவாக்கப்பட்டு, தமிழ்மூலம் கல்வி புகட்டப்படும் இன்றைய நிலையிலும் தமிழ் மொழியிற் பாண்டித்தியம் பெற்ற பண்டிதர்மார் அரசாங்கத்தால் சம்பளவிடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவது அநீதியாகும்''

இவ்வாறு அகிலஇல[ங்கை] பண்டிதர், வித்துவ[ான்] புலவர்கள் சங்கம் ச[ம்பள] பதவி நிர்ணயசபை[க்குச்] சமர்ப்பித்துள்ள ம[கஜர்] ஒன்றிற் குறிப்பிட்டுள்[ளது].

தொடர்ந்து அம் ம[கஜர்] கூறுவதாவது:

''அக்காலக் கல்விய[மைச்]சர் டாக்டர் டபிள்யூ. [...] நாயக்கா, க.பொ. த. [...] தர வகுப்புகளில் [...] மொன்றுக்கு பத்து ம[...] தியாலம் கடமையாற்[...] சிங்கள பிரசீன பண்[டிதர்]களுக்கு, பட்டதாரிச் [சம்]பளம் வழங்கினார். ஆ[...] தமிழ்ப் பண்டிதருக்கு [...] சலுகையும் கிடைக்கவி[ல்லை] [...] சகல பண்டிதர்மாரு[க்கும்] பட்டதாரிச்சம்பளம் [...] கப்படல் வேண்டுமென் [...] தலைமையாசிரியர் [...] களுக்கு ஆசிரியரை [...] மனம்செய்யும் விடய[த்...] அவர்களுக்கும் சலுகைய[...] கப்படல்வேண்டுமென[...] நாம் கோருகிறோம்''.

## இன்றைய பலன்

திங்கட்கிழமை
(13-1-69)
மார்கழி மீ", 30 உ

திதி- தசமி இரவு 10-52 மேல் ஏகாதசி.

நட்சத்திரம்- விசாகம் இரவு 4-31 மேல் அனுஷம்.

ராகுகாலம்- 8-03 — 9-33,

சுபநேரம்- 12-33 — 2-03

இன்று பிறந்தவர்களுக்கு— ஒளிமயமான எதிர்காலம் உதயமாகிவிட்டதென்றே கூற வேண்டும். கடந்த சில காலமாக உங்களைப் பாதித்த விஷயங்கள் மறைந்துவிடும். குடும்பத்தில் குதூகலம் நிலவும். பொதுமக்கள் மத்தியில் உங்கள் செல்வாக்குப் பெருகும். சுகாதாரவழியால் சிறிது சஞ்சலம் தோன்றிமறையலாம். வைத்தியச் செலவுகள் என்ற முறையில் பணம் செலவாகலாம். மாணவர்களுக்குக் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும். சிற்பத்தொழில் புரிவோர் சிறப்படைவர். ஓவியர்களுக்கும் நல்ல எதிர்காலமுண்டு. இறைநம்பிக்கை வெற்றியைத் தேடித் தரும்.

மேஷம்- குடும்பத்தில் மகிழ்ச்சி, புதிய உற்சாகம்.
ரிஷபம்- நட்பால்வினை, நாவடக்கம் நன்று.
மிதுனம்- பெரியஇடத்துச் சம்பந்தம் புகழ் குவியும்.
கடகம்- கடமையில் ஆர்வம், கண்ணியம் சேரும்.
சிம்மம்- கைநிறையப் பணம், காத்திருக்கும் உறவு.
கன்னி- புத்திக்கூர்மை, புதிய நினைவுகள்.
துலாம்- வாழ்க்கையில் புயல், வரவும் தடைப்படும்.
விருச்சிகம்- தேன்சிந்தும் பேச்சு, தேடியது கிடைக்கும்.
தனுசு- தென்றலும் தீயாக மாறும், திருடர் பயம்.
மகரம்- அறிவுத்தாகம், ஆக்கப் பணி.
கும்பம்- அதிகார மேன்மை. அதிர்ஷ்டமுமுண்டு.
மீனம்- பகைவர் உறவு, பணநஷ்டம்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## 'பாணி' நூல் வெளியீட்டு வி[ழா]

யாழ்ப்பாணம், தி[...]

திருநெல்வேலி சைவ [...]னேற்றக் கழகத்தின[...] பாணி சைவசமயநூல்[...] யீட்டுவிழா பொங்கல[...] மாலை திருநெல்வேலி [...] மேஸ்வரா கல்லூரி[...] வைரவர் கோவிலில் ந[டை]பெறும்.

நல்லை திருஞான ச[ம்பந்]தர் ஆதீன தர்மகர்[த்தா] ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்[தம்பி]ரான் சுவாமிகள் நூ[லை] வெளியிட்டு வைப்பார்.

இளைப்பாறிய மாவ[ட்ட] நீதிபதி எஸ். தம்பித்[...] உட்பட இன்னும் [...] இதில் பேசுவர்.

## மனைவியின் வீட்டுக்குத் [தீ]

### கணவனுக்குசிறை[...]

குரும்பசிட்டி ஞா[யிறு]

மனைவியின் வீட்டு[க்குத்] தீவைத்ததாக கணவன் [...] குற்றஞ்சாட்டித் தொ[டரப்]பட்ட வழக்கில் [...]னுக்கு ஒருவருடக்[...]யச் சிறைத்தண்டனை [...]தும் இரண்டு [...] பொலிஸ் கண்காண[ிப்பி]லிருக்க வேண்டுமென[...] மல்லாகம் நீதிபதி [...] எம். சண்முகலிங்கம் இ[...] தீர்ப்பளித்தார்.

மனைவியின் வீட்டு[க்கு] நெருப்பு வைத்ததாக [...]பதி ராஜேந்திரன்மீது [...]ளுகம் பொலிசார் வழ[க்குத்] தொடர்ந்திருந்தனர்.

## மலேரியா தடுப்பு

கோப்பாய் ஞ[ாயிறு]

கோப்பாய் சுகாதார [...]திக்குட்பட்ட கிராமங்[...] மலேரியா நோய் பர[...] வகையில் நடவடிக்கை [...]பதற்கென மலேரியா [...] தடுப்பு இயக்கம் ஒன்[...] பகுதியில் நிரந்தர[...] நிறுவுவதற்கான ஏ[ற்பாடு]கள் நடைபெற்று வ[ருகின்]றன.

## இருவர் கை[து] படகு பறிமுத[ல்]

நல்லூர் ஞ[ாயிறு]

சட்டவிரோதமாகக் [...]யேறினர்களென்ற [...]கத்தின் மீது தலைம[...] கடற்கரையில் இரு[...] மன்னார்ப் பொலிசார் [...]றுக் கைதுசெய்தனர். [...]கள் வந்திறங்கியதாகக் [...]தப்படும் ஒரு பட[கை] பொலிசார் கைப்பற்[றினர்].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேயர் தெரிவும் யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர்களும்

(நமது அலுவலக நிருபர்)

கடந்த மூன்றரை வருட கமிஷனர் ஆட்சிக்குப் பின்னர் இன்று மாலை புதிய மேயர் தெரிவு நடைபெறுகிறது. மேயர்தெரிவில் யார் யார் போட்டியிடுகிறார்கள் என்பதை அறிவதில், மக்கள் பெரும் அக்கறைகாட்டி வருகின்றனர். ஆனாலும் யார் மேயராக வருவார் என்பதை எவராலும் அறுதியிட்டு கூறமுடியாமலிருக்கிறது. மேயர் தெரிவிற்கு இன்னும் சிலமணி நேரம்மட்டும் இருந்த போதிலும், யார் மேயர் என்பதை அங்கத்தவர்கள்கூட சொல்லமுடியாதநிலைமை இம்முறை ஏற்பட்டுள்ளது.

மாநகர சபை தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் முதல் மேயருக்கு ஆதரவு தேடும் நிலைமையை எங்கும் காணக்கூடியதாகவிருந்தது. எந்தக்கோஷ்டியினருக்கும் மேயரை தெரிவுசெய்யக்கூடிய போதிய பெரும்பான்மையில்லாததால் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ்கட்சியினர் கூட்டு முன்னணி அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டனர். கூட்டு முன்னணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தையில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும் முக்கியபங்கெடுத்துக் கொண்டனர். கடந்த ஒரு மாதத்திற்குமேலாக இப்பேச்சுவார்த்தை நாளொரு மாற்றமும் பொழுதொரு திருப்பமுமாக வளர்ந்ததேயன்றி இறுதிமுடிவை ஏற்படுத்துவதற்கான நிலைமையை அமைத்துக்கொடுக்கவில்லை. நகர முன்னேற்றத்திற்கும், வட்டார அபிவிருத்திக்கும் கூட்டு முன்னணி நிறுவவேண்டும் என இரு கட்சியினரும் பொதுவாக அபிப்பிராயம் தெரிவித்தனர்.

தமிழரசு பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கமும், தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகக் காரியதரிசி திரு. த. சங்கரப்பிள்ளையும், கூட்டு முன்னணி அமைக்கும் முயற்சிக்கு ஆதர தெரிவித்தனர். சிற்சில சமயங்கள் இக்கூட்டு முன்னணி முறிந்துவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டபோதிலும், அந்த நிலைமை ஏற்படவில்லை.

கூட்டுமுன்னணியினர் ஆதரவு தேடும் அதேசமயம், துரையப்பா கோஷ்டியினர், ஆதரவு திரட்டுவதில், பல வழிகளாலும் முயற்சி எடுத்தனர். தங்கள் கோஷ்டியில் 10 பேர் இருப்பதாகவும், கடைசிநேரத்தில் மற்றக் குழுவைச் சேர்ந்த அவர்களின் ஆதரவு நிச்சயம்கிடைக்குமென, துரையப்பா கோஷ்டியின் முக்கிய உறுப்பினரான திரு. ஏ, ஜி. இராசசூரியர் தெரிவித்தார்.

மாவட்டசபை, பல்கலைக்கழகம், தமிழ்உரிமை விஷயங்களில் முதலில், தமிழ் காங்கிரஸ் - தமிழரசு ஒற்றுமைப்பட்டால், துரையப்பாவைப் போட்டியிலிருந்து நிறுத்துவதாகவும் திரு. ஏ. ஜி. இராசசூரியர் அறிக்கை விட்டார். இதன் பின்னர் மற்ருெரு உறுப்பினரான திரு. ஏ. எஸ். நடராசா, தமிழரசு, காங்கிரஸ் கூட்டு முன்னணி சார்பில், துரையப்பா கோஷ்டியினரையும் சேர்த்து ஏகமனதாக ஒரு மேயரை தெரிவுசெய்யமுன்வரும்படி வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு எதிர்குழுவிடமிருந்து பதில்கிடைத்தது. தனிப்பட்ட முறையில் மாநகர சபை உறுப்பினர் என்ற முறையில்தான் கூட்டுமுன்னணி முயற்சி நடக்கிறது என காங்கிரஸ் நிர்வாக காரியதரிசி திரு. தா. சங்கரப்பிள்ளை தெரிவித்தார். தமிழரசுக்கட்சியின் செயல் கமிட்டியும் யாழ்ப்பாணத்தில் கூடி மேயர் தெரிவு பற்றி நீண்ட நேரம் விவாதித்தபின்னர், கட்சிக்கட்டுப்பாடின்றி நகரசபை உறுப்பினர்கள், மேயர் தெரிவில் தங்கள் விருப்பப்படி நடக்கலாம் என தீர்மானித்தது. இதனைத் தொடர்ந்து மேயருக்கு ஆதரவு தேடும்முயற்சி வலுப்பெற்றது. அங்கத்தவர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசினர்கள்.

சுயேச்சை அங்கத்தவர்களில் சிலர் கடைசிநேரம் வரை தாங்கள் எந்தக் கோஷ்டியை ஆதரிப்பதென்பதை தெரிவிக்கவில்லை. இதற்கும் காரணம் உண்டு. ஆளும் கட்சியிலிருந்தால்தான் வட்டாரத்தை அபிவிருந்திசெய்வது சுலபமாயிருக்கும். சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள், யார் மேயராக வருவா என்பது தெரியாமல் தங்கள் முடிவைச் சொன்னால் அது சில சமயம் அவர்களுக்கு பாதகமாக அமைந்து விடும் இதன் காரணமாகத்தான் சுயேச்சை உறுப்பினர்கள் எந்தக் கோஷ்டியைச்சேர்ந்தவர் மேயராக வருகிருரோ அந்தக் கோஷ்டியை ஆதரிப்பதென முடிவு செய்திருக்கின்றனர். 11 அங்கத்தவர்களின்ஆதரவுடன் யார் வருகிறார்களோ அவரையே ஆதரிக்கப் போவதாக சில சுயேட்சை உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர். நுதலால் சுயேட்சை உறுப்பினர்கள் என்ன செய்வார்கள் என்பதை எவருமே சொல்லிவிடமுடியாது.

தமிழ் காங்கிரஸ் சார்பில் 9பேரும் தமிழரசு சார்பில் 5பேரும் சுயேட்சையில் 3 பேருமாக மொத்தம் 16 உறுப்பினர்கள் கூட்டு முன்னணியில்இருப்பதாக தமிழ் காங்கிரஸ் நிர்வாக காரியதரிசி திரு. தா. சங்கரப்பிள்ளை தெரிவித்திருந்தார். தமிழ் காங்கிரஸிற்குகட்டுப்பட்டு 8 அங்கத்தவர்கள் மேயர் தெரிவில் நடந்துகொள்வார்கள் என காங்கிரஸ் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இவர்களில் 4பேர் கட்சிசார்பில் போட்டியிட்டவர்கள் ஒருவர் கட்சின்னத்தில்சுயேட்சையாக போட்டியிட்டவர் மூவர்சுயேட்சையாகபோட்டியிட்ட காங்கிரஸ் ஆதரவாளர்கள் தமிழரசு கட்சி சார்பில் இருவர்போட்டியிட்டனர். இருவர்சுயேட்சையாக போட்டியிட்ட தமிழரசு ஆதரவாளர்கள். தமிழரசு கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் நான்குபேர்களே இருக்கின்றனர். தமிழரசு தமிழ் காங்கிரஸ் கூட்டு முன்னணியில் மொத்தம் 12 அங்கத்தவர்கள் இருக்கின்றனர். திரு. ஏ. ஜி. ராஜசூரியர் தெரிவித்தபடி துரையப்பா கோஷ்டியில்9 பேர்கள்இருக்கின்றனர் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஏ. விஸ்வநாதனும் மற்ருெரு சுயேட்சை உறுப்பினரும் எந்தக்கோஷ்டியிலும் சேராமல் நேற்று இரவுவரை தனிக் கோஷ்டியிலிருப்பதாக சமசமாஜக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் காங்கிரஸ் சார்பில் யாரை மேயர் போட்டிக்கு நிறுத்துவதென்பதில் ஆரம்பத்தில் முடிவு எடுக்க முடியாமல் போய்விட்டதாகவும் பின்னர் எல்லா உறுப்பினர்களும் கூடி ஒரு முடிவுக்கு வந்ததாகவும் ஒரு காங்கிரஸ் எம். எம். ஸி. தெரிவித்தார். முன்னாள் மேயர் திரு. ரி. எஸ். துரைராசாவையே மேயர் தெரிவிற்கு நிறுத்துவதென ஏகமனதாக முடிவுசெய்தார்கள். இம்முடிவை தமிழ்க்காங்கிரஸ் தலைமைப்பீடமும் ஏற்றுக்கொண்டது.

தமிழரசு சார்பில் முன்னாள் மேயர் திரு. எஸ். நாகராஜாவை நிறுத்துவதென தமிழரசு குழுவினர் முடிவு செய்ததாக, தமிழரசு எம். எம். ஸி. ஒருவர் தெரிவித்தார். துரையப்பா கோஷ்டியில் துரையப்பாவைத்தவிர வேறு எவரும் போட்டியிடமாட்டார்கள் என, அக்கோஷ்டியைச் சேர்ந்த எம். எம். ஸி. ஒருவர் தெரிவித்திருந்தார்.

கூட்டு முன்னணி அமைப்பதில் தமிழரசு, காங்கிரஸ் ஒரே கருத்தைக்கொண்டிருந்தபோதிலும், யாரைமுதல் மேயராக்குவதென்பதில் முடிவுகாண முடியாது திண்டாடினார்கள். இம்முடிவை எடுப்பதற்காகவே பல நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்கள் முதல் இரண்டு வருடத்திற்கும் கூட்டு முன்னணியைச் சேர்ந்த ஒருவரையும், கடைசி இரண்டு வருடத்திற்கு மற்ருெரு வரையும் மேயராக்குவதென தீர்மானிக்கப்பட்டதாக இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மூன்றரை ஆண்டு காலமாக கமிஷனர் ஆட்சியில் நகரம் பல முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இதனை எம். எம். ஸி. ஒருவரே வலியுறுத்திக் கூறியிருக்கிறார், வாக்காளர்களில் கூட சிலர் கமிஷனர் ஆட்சியையே விரும்புகின்றனர். இதற்குக் காரணம் உறுப்பினர் மத்தியில் ஒற்றுமையின்மைதான். அடிக்கடி மேயர்கள் ஏறி இறங்குவதால் நகர முன்னேற்றமும், வட்டார அபிவிருத்தியும் தடைப்படுகிறது. மேயர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட வேண்டுமென்பதே வாக்காளர் பலரின் விருப்பம். ஆனால் நிலைமையைப் பார்க்கும் போது இது இலகுவில் நடைபெறக் கூடியதாக தெரியவில்லை. கமிஷனர் ஆட்சியில் நடந்த முன்னேற்றத்திலும் பார்க்க பலமடங்கு முன்னேற்றம். சபையின் ஆட்சியில் நடைபெறவேண்டுமென்றே வாக்காளர்கள் விரும்புகின்றனர். புதிய மேயராக தெரிவு செய்யப்படுவர். எவ்விதபாகுபாமின்றி சகல வட்டார அங்கத்தவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றும் எதிர்க் குழுவினரின் நல்ல கருத்துக்களுக்கும் மதிப்பளித்து அவர்களின் வட்டார அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தி நகர முன்னேற்றத்தில் கூடிய பங்கெடுத்து வாக்காளரின் கஷ்டங்களை உடனுக்குடன் தீர்த்து வைத்தால் எல்லா மக்களினதும் பாராட்டையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

## வடபகுதியில் 3 இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள்

வல்லிபுரக்கோவில் பகுதி, யாழ்ப்பாணம் கோட்டை, கந்தரோடை ஆகிய இடங்களில் விரைவில் புதைபொருள் ஆராய்ச்சி நடைபெறுமெனத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் வடபகுதிக்கு வந்திருந்த புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனர் டாக்டர் சில்வா மூன்று இடங்களையும் பார்வையிட்டார்.

கந்தரோடை பகுதியில் ஏற்கனவே புதை பொருள் ஆராய்ச்சி நடைபெற்று ஆயிரக்கணக்கான மணிகளும், பௌத்த சின்னங்களும், புத்தரின் அடிச்சுவடுகள் கொண்ட கற்களும் கண்டெடுக்கப்பட்டன.

டாக்டர் சில்வா நேற்று யாழ்ப்பாணம் நூதனசாலைக்குச் சென்று அங்குள்ள பொருள்களை குறிப்பாக கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை பார்வையிட்டார்.

## காமராஜ் தாயார்

மதுரை, ஜன. 12

நாகர் கோவில் உபதேர்தலில் பெரும் வெற்றியீட்டியுள்ள திரு. காமராஜரின் அன்னை சிவகாமி அம்மாள் கடும்சுகவீனமுற்றிருக்கிறார். அவரின் நிலைமைகவலைக்கிடமாக இருப்பதால் மகனின் வெற்றியைக்கூட அவர் தெரிந்துகொள்ளாத மயக்க நிலையிலிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றி பெற்ற திரு. காமராஜர் உடனே விரைந்து நக[illegible] [illegible]ரைப் பார்க்கச்சென்றார்.

## பல்லவராயன் கட்டுக்கு உதவி

கிளிநொச்சி, சனி

பல்லவராயன்கட்டுக்கு 10,000 ரூபா விசேஷ நன்கொடை வழங்க உள்ளூராட்சி அமைச்சர், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்திடம் இணக்கம் தெரிவித்துள்ளார். விரைவில் இப்பணம் கிராமசபைக்கு வழங்கப்படும்.

## பஸ்சேவை

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பருத்தித்துறையிலிருந்துகீரிமலையூடாக இளவாலை வரை நடைபெற்ற பஸ் சேவை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி ஊடாக இளவாலைவரை இரட்டைத் தட்டுபஸ் காலையிலும் மாலையிலும் சேவையிலீடுபட்டுள்ளது.

(11-ம் கலத் தொடர்ச்சி)

டாலும் இருக்கிறதே! அவை போதாதா?' என்று தமது புது மனையாட்டி கேட்பதாக ஒருவர் கூறி இந்த விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டார். புதிய மண் அடுப்புகளில் புதுப் பானையில் பொங்குவதில் ஒரு தனி உருசியும் புனிதமும் பரிசுத்தமும் இருக்கிறதென்று என் சொந்த அபிப்பிராயத்தைவெளியிட்டேன்.

உங்களுடைய அபிப்பிராயம் என்னவோ?

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

ஞாலம் முழுவதையும் வாழவைக்கும் ஞாயிறு பகவான் நாளை விடியற்காலை உதயமாகி வரும்போது தமிழ் கூறும் நல்லுலகம் அவனை 'ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்' என்று வணங்கி வரவேற்கும். எண்பத்து நாலாயிரம் யோனி பேதங்களுக்கும் உயிரூட்டி வளர்ப்பவன் அவன். அவர்களுக்கு இன்றியமையாத காற்றையும் நீரையும் உணவையும் ஒளியையும் தருபவன் ஆதவன் ஆதலால் அவன் கண் கண்ட கடவுள் எனப் போற்றப் படுகிறான்.

சூரியன் வான **மண்**டலத்திலுள்ள தனுராசியிலிருந்து மகர ராசிக்கு பிரவேசிக்கும் முதலாம் நாள் மகர சங்கராந்தி எனப்படும். தைமாதத்திலிருந்து ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களில் அவனுடைய வான வெளி பிரயாணத்தை தட்சண அயனம் என்றும் கூறுகிறோம். இந்த உத்தர அயனத்தில் சூரியனுடைய பலம் அதிகரித்து வளர்ந்து சித்திரை மாதத்தில் தனது உச்ச ஸ்தானத்தை அடைகிறான் என்பர் வான சோதிடர். ஆகையினால் தான் மகர சங்கராந்தியைப் புண்ணிய காலம் என்றும் நற்காலத்தை குறிக்கும் சுப தினம் என்றும் கருதி தமிழ் மக்கள் நாளை தைப்பொங்கல் கொண்டாடுகிறார்கள்.

0 0 0

'சங்கராந்தி வந்து விட்டதே, இனி நாங்கள் எங்கு போய் ஒளித்துக் கொள்ளலாம்' என்று மழைக் காலம் முழுவதும் மனிதனுக்கு உபாதை கொடுத்து வந்த நுளம்புக் கூட்டங்கள் ஒன்றையொன்று கேட்குமாம், தைப் பிறப்பு வருவதையொட்டி பீடை நிறைந்த மார்கழி மாதத்திலேயோ இல்லங்கள் யாவும் புதுப்பிக்கப் படுகின்றன. புல் பூண்டுகளை களைந்து வளவுகளை துப்புரவாக்குவார்கள். மாரியில் நிறைந்து மழை நீர் மண்டிக் கிடக்கும் கிணறுகளை இறைத்து சுத்தப்படுத்துவார்கள், வீட்டில் ஒவ்வொரு அறையும் திண்ணையும் சுவரும் சாணத்தால் மெழுகி திருத்தப்படும். படுத்துறங்கும் பாயும் புழங்கும் கட்டில் மேஜை கதிரை முதலியனவும் அழுக்கு நீக்கப்படும். இப்படியே ஒளிக் கடவுளான ஆதவனை தைப் பிறப்பில் வரவேற்பதற்கு ஒவ்வொரு இல்லமும் தயாராகி விடுகின்றது.

நமது கிராமத்திலும் தைப் பொங்கல் வருவதற்கான தடபுடலான ஏற்பாடுகள் கடந்த சில தினங்களாக நடைபெற்று வருகின்றன. புது மட்பாண்டங்களும் அகப்பைகளும் வாழைக் குலைகளும் எல்லாவற்றுக்கும் மேலாக பட்டாசுக் கட்டுகளும் கடைகளில் தோன்ற ஆரம்பித்து விட்டன. ஒவ்வொரு குடும்பஸ்தனுடையகையிலும், அவன் எத்தகைய ஏழையாயிருந்தாலும், பொங்கற் சாமான்கள் காணப்படுகின்றன. சர்க்கரை ஏதேஷ்டமாக இல்லாவிட்டாலும் எல்லோருக்கும் ஓரளவாவது சங்கக் கடைகள் மூலம் கிடைக்கின்றது. சாமான்களின் விலை ஏறிவிட்டது. உண்மையாயினும் அவை கிடைக்கக் கூடியதாயிருக்கிறதே என்று மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

'புதிய மண் அடுப்புகளும் புதிய பானையும் எதற்காக? வீட்டில் மண்ணெண்ணை குக்கரும் அலுமினியக் குண்

(10-ம் சலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சட்டத்தின்மூலம் சமுதாயம் சீர்திருந்தாது'

### நெல்லியடியில் ஜெயப்பிரகாஷ்

பருத்தித்துறை, ஞாயிறு

'சட்டத்தின்மூலம் சமுதாய சீர்திருத்தத்தை ஏற்படுத்தமுடியாது. அரசியல் திட்டத்தின்மூலமும் சட்டத்தின் மூலமும் தீண்டாமையை ஒழித்துக்கட்ட இந்திய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் இன்றுவரை எவ்வித பயனும் அளிக்கவில்லை. சமுதாயத்தின் அமைப்பிலும் சிந்தனையிலும் மாற்றமேற்பட்ட பின்னரே சட்டங்களை இயற்றலாமெனக் காந்திஜீ கூறினர்'

இவ்வாறு சர்வோதயத் தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயமைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூறினர். கல்லூரி அதிபர் திரு. கே. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

'சர்வோதயம் என்பது அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வேரோடு சாய்க்க விழைந்த மகாத்மாஜீ, தனிப்பட்ட வெள்ளைக்காரரிடம் அன்புகொண்டிருந்தார். தானம் என்பது பகிர்ந்து வாழ்தல் என்னும் கோட்பாட்டை உறுதியுடன் கைக்கொண்டார்'.

ஸ்ரீஜெயப்பிரகாஷ்மேலும் பேசுகையில், பாடசாலைகளிலும், பொதுநூலகங்களிலும் மகாத்மாவின் நூல்கள் நிறைய இடம்பெறவேண்டும். அவரது புனிதப்புரட்சியின் தத்துவத்தை சகலரும் நன்கு உணரவேண்டும் என்ருர்.

வடமாணிலக் கல்வியதிபதி திரு. எஸ், தணிகாசலம் முன்னுள் பேராசிரியர் திரு. கு. நேசையா, காந்திசேவா சங்கத்தின் செயலாளர் திரு. சி. கே. வேலாயுதபிள்ளை, திரு. ச. அம்பிகைபாகன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

உடுப்பிட்டி எம். பி.யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் ஸ்ரீஜெயபிரகாஷ் தம்பதிகளுக்கு நன்றி கூறினர்.

## தபால் நிலையத்தின் சீர்கேடு

கோப்பாய், ஞாயிறு

தற்போது முதலாந்தரத்தில் உயர்ந்துள்ள கோப்பாய் தபால்நிலையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. மழைகாலங்களில் ஊழியர்கள் இங்கு வேலைசெய்ய முடியாத நிலையிலுள்ளனராம். இக்கட்டடத்தை வசதியான வகைக்கேற்ப புதுப்பித்தோ அல்லது வேறிடத்துக்கு மாற்றியோ தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் இதுவரை எதுவித பலனும் ஏற்படவில்லையாம்.

# லஞ்ச ஊழலை ஒழிக்க பிரேமதாஸ உறுதி

பம்பலப்பிட்டி, ஞாயிறு

தமது லஞ்ச ஊழல்களை அறவே ஒழிக்கப்போவதாக ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. ஆர். பிரேமதாச உறுதியளித்துள்ளார். ஸ்தலஸ்தாபன அமைச்சின் அலுவல்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கும் பெருந்தடையாக இருப்பது இந்த லஞ்ச ஊழல்களே எனவும்தனது அமைச்சில்எவரேனும் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அவர்மேல் கடும்நடவடிக்கைஎடுக்கப்படுமென எச்சரித்துள்ளார். அநேகமாகக் கைலஞ்சம்வாங்குதல் ஸ்தலஸ்தாபன அமைச்சில் 'ரெண்டர்கள்' வழங்குகையிலேயே நடைபெறுவதாக ஸ்தலஸ்தாபன அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது இனிமேல் நடைபெருமல் தக்கநடவடிக்கையெடுப்பதாகவும் இத்தகைய குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வராமல் அமைச்சர் கவனம் செலுத்துவார் எனவும் அறிவிக்கப்பட்டது.

## திருப்பள்ளி எழுச்சி

அளவெட்டி, ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் மார்கழிமாத அதிகாலை பஜனைச்சபையினரால் நடாத்தப்பட்ட திருப்பள்ளி எழுச்சி பாடல் போட்டி நேற்று நடைபெற்றது.

## வருடம் முழுவதும் மரக்கறிகிடைக்கும்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

மக்களுக்குத் தேவையான மரக்கறி வகைகளை வருடம் முழுவதும் விநியோகிக்க உணவு, விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது. மரக்கறி உற்பத்தியாளர் மரக்கறிச் செய்கையைப் பெருக்குவதற்குவேண்டிய வசதிகளைச் செய்யுமாறு அதனோடு தொடர்புள்ள அதிகாரிகளுக்கு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா உத்தரவிட்டுள்ளார். கூடிய நிலப்பரப்பில் மரக்கறிச் செய்கை பண்ணவேண்டிய நிதியுதவியையும் அத்துடன் விரைவான மரக்கறி விதை விநியோகத்தையும் மேற்கொள்ளுமாறு மந்திரி அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக தெரிகின்றது.

## 784 பஸ்ஸில் மாற்றம் இல்லை

காரைநகர், ஞாயிறு

''காரைநகர் உப பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்களில் எதுவித மாற்றமும் இம்மாதம் முதல் இருக்கமாட்டாது'' என யாழ்ப்பாணம் இ. போ. ச. முகாமையாளர் வட இலங்கை பொதுப் போக்குவரத்து பிரயாணிகள் சம்மேளனத்திற்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

காரைநகரில் இருந்து செல்லும் 784 இலக்க பஸ்கள் சித்தங்கேணி ஊடாக யாழ்ப்பாணம் செல்வதற்கு மாற்றினல் பிரயாணிகள் நீண்டதூர பிரயாணத்தால் கஷ்டம் அனுபவிக்க வேண்டும் எனச் சம்மேளனம் இ. போ. ச. முகாமையாளருக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

## பயிர்கள் சேதம்

கோப்பாய், ஞாயிறு

இப்பகுதிக் காலபோக வேளாண்மை பெரும்பாலானவர்களுக்கு பெரும் நஷ்டத்தை யுண்டுபண்ணியுள்ளது. மழை இல்லாததால் வயல்களில் உள்ள நெற்பயிர்கள் யாவும் நாசமடைந்துள்ளன. இப்பகுதி விவசாயிகள் நெற்காணிக்கான வரிப் பணத்தை செலுத்த முடியாத நிலையிலுள்ளனர்.


பல மடங்கு பயன் பெற பாவியுங்கள்

திறீ றோஸஸ்




தரத்தை நாடும் புகை பிடிப்பாளர், வேறெதைக் கொடுத்தாலும் விட்டு மாற விரும்பாத சிறப்புகள் சில உண்டு. சுவை அவற்றில் ஒன்று — செறிந்த சுவை! நேர்த்தியான புகையிலைக் கலவை மற்றது. அதுவே உண்மையான திருப்தி தரும் புகைபிடி இன்பத்தை எப்போதும் அளிப்பது.

இந்தச் சிறப்பெல்லாம் சேர்ந்த ஒரே சிகரெட்தான் — திறீறோஸஸ்

அது இலங்கையின் அபிமான சிகரெட்டாகத் திகழக் காரணம் அதுவே!

தரத்தை நாடுவோர் அதை விடச் சிறப்புக் குறைந்ததை நாடாமலிருக்கக் காரணமும் அதுவே!

திறீ றோஸஸ்-முற்றிலும் சுவையான முழுத் திருப்தி தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரீஸ்டார் சாம்பியனுகியது

புத்தளம், ஞாயிறு

புத்தளம் நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற வட்டார உதைபந்தாட்டப் போட்டியில் இம்முறை திரீஸ்டாரே சாம்பியனுகியது.

திரீஸ்டார், போல்ரன் கழகங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் திரீஸ்டார் 3 - 2 கோல்களால் வெற்றிபெற்று சாம்பியனுகியது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரசாங்க அதிபர் திரு. எம். டபின்யு. எஸ். குணரத்தின நீர்கொழும்பு திருமதி விளெட்ருஜபக்ஷாவால் அளிக்கப்பட்ட வெற்றிக்கேடயத்தை சாம்பியனுகிய கோஷ்டிகாப்டனுக்கு வழங்கினுர்.

விளையாட்டு ஆலோசகர் திரு. ஏ. வி. நடராசா இப்போட்டிக்கான ஒழுங்கைச் செய்திருந்தார்,

## இராணுவக் கோஷ்டி நாளை மோதும்

யாழ்ப்பாணம், திங்.

இலங்கை இராணுவப் படை உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி நாளை யாழ்ப்பாணம் வருகின்றது.

நாளை மாலை யாழ். விளையாட்டரங்கில், யாழ். மாவட்ட அரசாங்க தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் இக்கோஷ்டிமோதும்.

இராணுவக் கோஷ்டி யாழ்ப்பாணம் வருவதற்கான சகல ஏற்பாடுகளையும் அரசாங்க இலாகா விளையாட்டுச் சங்க காரியதரிசி திரு. இ. கே. குமரையா மேற்கொண்டுள்ளார். (தே. நி)

## 'கிறீன்பீல்ட்' வி. க. புதுவருட உத்தியோகஸ்தர்

யாழ்ப்பாணம்திங்,

யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தலைவர் பி. எவ். சேவியர் தலைமையில் கழக மண்டபத்தில் நடைபெற்ற போது, பின்வருவோர் இவ்வருட புதிய உத்தியோகஸ்தர்களாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: பி. எப். சேவியர். உப-தலைவர்கள்: திருவாளர்கள் ஜி. செபஸ்தியாம்பிள்ளை, ஜி. எஸ். அன்ரனி, ஜி. பஞ்சநாயகம், எஸ். தம்பு. காரியதரிசி: எல். ஜி. போல். உப-காரியதரிசி: ஜி. பிரான்சிஸ். விளையாட்டுக் காரியதரிசி: ஏ. தேவராசா. உப-விளையாட்டுக் காரியதரிசி: எஸ். எம். மரியநாயகம். தனதிகாரி: பி. கிறிஸ்தோஸ்திரம். கணக்குப் பரிசோதகர்: எம். டி. தம்பிராசா.

திருவாளர்கள் எம். சிங்கராயர், ஏ. கிறிஸ்தி, எம். அமலதாஸ், எம். செல்லத்தம்பி, எம். கனகலிங்கம், ஜே. அலன், ஜே. சி. ராசநாயகம் ஆகியோரும் நிர்வாக அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (தே. நி)

## ஆயுள்வேத வைத்தியர் கோரிக்கை

சுழிபுரம், ஞாயிறு

'ஆயுள்வேத கொமிஷனரால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட சம்பள அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றில் கடமையாற்றும் வைத்தியர் சம்பளம் பெற்றுக்கொள்ளவில்லை. இதனை உடன் நிவிர்த்தி செய்யவும், எனக்கோரும் ஓர் தீர்மானம் சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சங்கத் தலைவர் வைத்தியர் [illegible] பிள்ளை கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

## சர்வோதயம் பற்றி ஜெயபிரகாஷ் விளக்கம்

உடுப்பிட்டி, ஞாயிறு

''சமாதானத்தையும், பொதுநோக்கையும் அடிப்படையாகக் கொண்டதே சர்வோதயம் எனப்படும். அமரர் மகாத்மாகாந்தியின் கருத்தும் இதுவே. மத, இன, மொழி அடிப்படையில் சமூகத்தில் எவ்வித வித்தியாசமும் காட்டக்கூடாது. இந்த நோக்கங்களுக்காக இந்திய மக்கள் போராடுவது தனி இந்தியருக்கு மட்டுமின்றிப் பொதுவாக உலக மக்கள் யாவரதும் முன்னேற்றத்துக்கும் நல்லெண்ண விருத்திக்கும் அடிகோலுவதாகும்.''

அகில இந்திய சர்வோதய தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மேற்கண்டவாறு கூறினுர்.

வெள்ளிக்கிழமை மாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே திரு. நாராயண் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு. கே. சிவசிதம்பரம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றும்போது அவர்களுக்கு எந்த விதமான தீங்கு செய்யவோ அவர்கள் மீது துவேஷ உணர்ச்சி காட்டவோ கூடாது என்று காந்தி வற்புறுத்தி வந்தார். இந்திய சுதந்திரத்தை நாங்கள் அடையவேண்டுமானுல் இந்திய சமுதாயத்திலேயுள்ள சாதி, சமய வித்தியாசங்கள், துவேஷ உணர்ச்சிகள் களைந்தெறியப்படவேண்டும்.

சமூகத்தில் ஏற்படும் புரட்சிகள் பொது நோக்குடையதாக இருக்கவேண்டும். இதனுல் விளையும் நன்மைகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும். இந்த உயர்ந்த கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்ட சர்வோதய பாதையில் இந்திய மக்களை வழிநடத்திச் செல்லவேண்டும். இவ்வித தீவிரமான கொள்கையில் காந்திஜி ஊறியிருந்தார்.

கடந்த கால சரித்திரம் காந்தி வாழ்ந்த சுயநலமற்ற பொதுவாழ்வு போன்ற தியாக உணர்ச்சிகளை எமக்கு வெளிப்படையாகக் காட்டுகின்றது. இந்த அடிச்சுவட்டிலேதான் வினோபாஜிஅவர்களும் கிராமதானம், சிரமதானம்போன்ற புனித இயக்கங்களைக் கொள்கை பிசகாமல் வெற்றிகரமாக இயக்கிக்கொண்டிருக்கிறுர்.

சமூகத்தில் அனைவரிடையேயும் சமஅந்தஸ்தும், சம எண்ணமும் நிலவவேண்டும். பரஸ்பரம் நன்மை தீமைகளை இன, மத, மொழி வேறுபாடின்றிச் சமூகத்தவர்கள் பகிர்ந்துகொள்ளவேண்டும்.''

ஆட்சிமன்ற உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம் சர்வோதயத் தலைவரை வரவேற்றுப் பேசுகையில், ''ஈழத்தில் இன்று நிலவும் பிரச்னைகளுக்கு மருந்து சர்வோதயமே. எம் அனைவரிடையேயும் நாம் ஒரே சமூகத்தவர்கள் என்ற எண்ணம் எழவேண்டும். இதன்மூலமே சமூகம் சுபீட்சமடையும். சர்வோதயக் கொள்கைகள் இந்தியாவுக்கு மட்டுமல்ல ஈழநாடுக்கும் இன்றியமையாதது. சர்வோதயத் தலைவரின் யோசனைகளைப் பின்பற்றுவதின் மூலம் மனநிறைவு பெறலாம்'' என்று கூறினுர்.

திருமதி நாராயணனும் இச்சொற்பொழிவிற்கு வந்திருந்தார். வடமாநில வித்தியாதிபதி திரு. தணிகாசலம், வடபிரதேச கம்யூனிஸ்டகட்சி முக்கிய பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் எம், ஏ. ஆகியோரும் உரையாற்றினர்,

ஸ்ரீநாராயணனுக்கும் அவரது பாரியாருக்கும் நெல்லியடியில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. நெல்லியடி மக்கள் சர்வோதய நெறிகளை அறிந்துகொள்வதில் காட்டும் ஆர்வம் தன்னைப் பெரிதும் கவர்ந்துள்ளதாக திரு. நாராயண் தெரிவித்தார்.

## 'என்ன செய்வது'?

சுழிபுரம், ஞாயிறு

சிங்கள மொழியில் தந்தித்தொடர்பு வேலைகள் செய்யவேண்டுமென தமிழ் பேசும் உபதபால் அதிபர்களுக்கு தபால் தந்தித் தொடர்பு அதிகாரியால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தையடுத்து தமிழ்பேசும் உபதபால் அதிபர்கள் யாது செய்வதென ஆலோசித்து வருகின்றனர்.

அகில இலங்கை தமிழ் பேசும் உபதபாலதிபர்கள் சங்கத்தினர் இதுவிடயமாக விரைவில் தபால்மா அதிகாரியைப் பேட்டிகாணவிருக்கின்றனர்,

சங்கச்செயலாளர் தமிழ் பகுதியில் தந்தித் தொடர்பு இணைக்கப்பட்டஉபதபாலதிபர்களுடன் ஆலோசனைநடாத்திவருகின்றுர். இதுவிஷயமாக சங்கத்தனதிகாரி கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்துடன் தொடர்பு கொண்டு யாதுசெய்வது என்பதை ஆராய்ந்துள்ளார்கள். அச்சுற்றுநிருபத்துக்கான பதில் விரைவில் அறிவிக்கப்படுமென அறிவித்துள்ளனர்.

## குள்ளமானவர்களை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றுலும், அவர்களது எலும்புகள் அதிக நீளமாக இருப்பதுமட்டுமல்லாமல், முறையான அமைப்பில் அமையாமலும், மென்மையான திசுக்கள் பருமனுகி விடுகின்றன இதன் விளைவாக அவை அடிக்கடி பலவீனமாகின்றன.

தடுக்கப்பட்ட வளர்ச்சி பொதுவான குழந்தைப்பிராயத்தின் தொடக்கத்திலிருந்த போது சுகவீனம், பலவீனம், மலட்டுத்தன்மை ஆகியவற்றுடன் இணைந்தே வருடுவதைக் காணமுடிகிறது. இருப்பினும் சில குள்ளர்களும் நல்ல ஆரோக்கியத்துடன், பிள்ளைப்பேறுடையவர்களாகவும் கிழவயதுவரை வாழ்ந்தும்இருக்கிறுர்கள். உதாரணமாக106 வயதுவரை வாழ்ந்த குள்ள மனிதர் பற்றி ரஷ்ய டாக்டர் ஏ. குசாகோவ் வர்ணித்திருக்கிறுர்.

தடுக்கப்பட்ட வளர்ச்சிக்கு சிகிச்சையளிக்கும் முயற்சி ஆர்வமிக்க முடிவுகளைத் தந்துள்ளது. 1956ல் உக்ரேனை சேர்ந்தநிபைப்ரோபெத்ரோவ்ஸ்க்கிலிருந்து பேராசிரியர் டி, கினிலோரிபாவ் பதினெரு குள்ளர்களுக்கு ஹைபோபிசிசை மாற்றி அமைத்துவிட்டார். மூன்று வருடங்களில் அவர்களது உயரம் 11.18 சென்டிமீட்டர் அளவில் அதிகரித்தது. நாளமில்லாச் சுரப்பியல் மற்றும் ஹார்மோன் ரசாயனப் பரிசோதனை அகிலயூனியன் நிலையத்தைச் சார்ந்த என். ஸாருபினு என்பவர் ''மெதிலான்ரேஸ்டிரேலான்'' மருந்தைப் பயன்படுத்தி, சிலரிடம் 32 சென்டி மீட்டர் வரை வளர்ச்சியை அதிகப்படுத்தினுர். வளர்ச்சி ஹார்மோனையே பயன்படுத்துவதற்கு சமீபத்தில் முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இதனுடைய உருவ அமைப்பு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது ஆகையால் மருந்தாக்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. மனிதனின் உடலிலேயே நடைமுறைப்போக்குகளை முறைப்படுத்துவதன் மூலமாக, இயற்கை தவறவிட்டவைகளை டாக்டர்கள் அபிவிருத்திசெய்துவிடுவார்கள். அதற்கான நாளும் வெகு தொலைவில் இல்லை.

## புதிய அங்கத்தவர்கள்

அச்சுவேலி, திங்கள்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபையின்வருடாந்தக்கூட்டம் திரு. இ. இராசரத்தினம் தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இளைப்பாறிய 10 அங்கத்தவர்களின் இடங்கட்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

சீனிவாசகம் யாழ்நகர், செ. நடராசா வலிகிழக்கு, எஸ். கிறிசோஸ்ரம் வலிகிழக்கு, அன்ரன் பொன்னம்பலம் கரைச்சி, எஸ். நாகலிங்கம் வவனியா, எஸ். அந்தோனிப்பிள்ளை மன்னுர், கே. என். சேனுல் அப்தீன் மாந்தை, வே. சு. பொன்னையா 23-ம் உபவிதிப்படி தெரிவு செய்யப்பட்டவர், அ. செல்லத்துரை தீவுப்பகுதி, எவ். வி. மிக்கேற்பிள்ளை முல்லைத்தீவு.

தலைவராகதிரு. இ. இராசரெத்தினம் திரும்பவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.


பலமற்ற பாட்டரிகளைப் புறக்கணியுங்கள்

எவலைற் பாட்டரிகளை மாட்டுங்கள்




கிடைக்கும் இடம்

சீ. வி. பாட்

கொழும்பு — கண்டி — யாழ்ப்பாணம்

தயாரிப்பாளர்: மேர்கரி பாட்டரி கம்பனி

11·83·68


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமானப்படை கமாண்டர் பிணையில் விடப்பட்டார்

கொழும்பு, ஞாயிறு

**பணம் கையாடியதாக கைதுசெய்யப்பட்டிருந்த றேயல் விமானப்படை விங்கமாண்டர் திரு. கே. எஸ். சண்முகரத்தினம் பிணையில் விடப்பட்டுள்ளார்.**

விமானப்படை ஊழியர்களுக்குரிய ஒரு மாதச் சம்பளத் தொகையையும் விமானப்படைக்குச் சொந்தமான பணம் சுமார் 42 ஆயிரம் ரூபாவையும் இவர் கையாடிவிட்டதாக பொலிசார் கோட்டை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தார்கள் முதல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இவர் பின்னர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

பணம் கையாடல் செய்ததாகப் பொலிசார் இவர் மீது கோட்டை மாஜிஸ்திரேட் முன் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர். ரூபா 50,000 பிணையில் செல்லுமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## "இலவச கல்வி 'பிரச்னையை 'சியவச' சமாளிக்கும்"

உடும்பராய், ஞாயிறு

'முற்காலத்தில் பாடசாலைகளின் வளர்ச்சியின் பொருட்டு பொருள் சோக்க சுவீப் முறை கையாளப்பட்டது. தற்போது இலவசக் கல்வித் திட்டத்தின் காரணமாக அரசாங்கம் பொருளாதார ரீதியில் பல பிரச்னைகளைச் சமாளிக்கவேண்டியுள்ளது. பொருளாதாரப்பிரச்னையை ஓரளவுக்கேனும் சியவச சுவீப் முறையால் சமாளிக்க முடியுமெனக் கருதி கல்வி நூற்றுண்டை முன்னிட்டு கல்விப் பகுதியினர் அதை நடாத்த முன்வந்திருக்கிறதில் நியாயமுண்டு. பரிசில்களாக வழங்கப்படவிருக்கும் 3 லட்சம் ரூபாவரையான பரிசில்களில் முதலாம் பரிசான 1 லட்சம் ரூபாய் பரிசு கோப்பாய் வட்டாரத்தில் ஒருவருக்குக்கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.'

கோப்பாய் வட்டாரத் தலைமையாசிரியர்கள் அதிபர்கள் கொண்ட மகாநாடொன்றில் கோப்பாய் வட்டார கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் மேற்கண்டவாறு தமது தலைமையுரையின் போது குறிப்பிட்டார்.

அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் தலைமையாசிரியர் சங்கச் செயலாளர் திரு. எஸ். வி. வேலுப்பிள்ளையிடம் இருந்து முதல் லொத்தர் சீட்டை திரு. வே. சண்முகநாதன் பெற்றுக்கொண்டார்.

## பேர்மிட்

கொழும்பு, ஞாயிறு

சிமெந்து விநியோகம் இனிமேல் 'பேர்மிட்' மூலம் செய்யப்படும் என்று தெரிகின்றது.

நாட்டில் சிமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் சிமெந்து பாவனையாளர்களுக்கு 'பேர்மிட்' முறையில் கூட்டுறவு மொத்த விற்பனவுஸ்தாபனத்தின் மூலம் மட்டும் விநியோகம் செய்வதுபற்றி அரசாங்கம் ஆலோசித்துவருகின்றது.

சிமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் அதேவேளையில் வியாபாரிகள் சிலர் சிமெந்தை வாங்கி பதுக்கி வைத்து லாபம் அடிக்க முயற்சிசெய்வதாக அரசாங்கம் கருதுகின்றது.

## நூல் வெளியீட்டு விழா

சித்தங்கேணி, திங்கள்

சித்தங்கேணி கலைநகரைச் சேர்ந்த நா. க. தங்கரத்தினம் எழுதிய ''இப்படி எத்தனை நாட்கள்'' என்னும் நூல் வெளியீட்டு விழா பொங்கல் தினத்தன்று வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவிலடியில் அமைந்துள்ள நேருஜி அரங்கில் நடைபெறவிருக்கிறது. தலைமையாசிரியர் திரு. வி. தெய்வேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும் எழுத்தாளர்களும் கலந்து கொள்வர்.

## 'புத்தர் காந்தி இடையில் நெருங்கிய உறவு'

கொழும்பு, ஞாயிறு

''புத்த பிரான் காட்டிய பாதைக்கும், மகாத்மா காந்தி காட்டிய பாதைக்கும் நெருங்கிய உறவு உள்ளது'' என்று காந்தியின் சீடரும், சர்வோதய இயக்கத் தலைவருமான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கொழும்பு விக்டோறியா ஹாலில் நடைபெற்ற வைபவமொன்றில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தொடர்ந்து பேசுகையில், மகாத்மா காந்தியடிகளுக்கெனச் சமயம் ஒன்றும் கிடையாது. அவர் கொள்கைகளும், அவரது செயல் தத்துவங்களும் தான் வாழ்கின்றன. அவைகளை நாம் கடைப்பிடிக்கவேண்டும் என்று கூறினர்.

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில், உலகம் போற்றும் மகானக வாழ்ந்த மகாத்மா காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மற்றும் பலரும் பேசினர்.

## கோப்பாய் எம். பி.வீட்டில்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேயராக யார் தெரிவுசெய்யப்படுவாரென்று நிச்சயமாகச் சொல்லமுடியாத நிலை நேற்று நள்ளிரவுக்குப் பின்னரும் நீடித்தபோதிலும் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி முன்னாள் மேயர்களில் ஒருவரான திரு. தா. ச. துரைராஜாவே மீண்டும் இன்று மேயராகத் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் இப்போதுள்ள நிலைமையில் மேயர் தெரிவு திருவுளச் சீட்டின் மூலமும் நடைபெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாமென்றும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண நகருக்குப் புதிய மேயரைத் தெரிவு செய்வதில் தமிழ்க்காங்கிரஸுக்கும், தமிழரசுக்கட்சிக்குமிடையில் ஓரளவு உடன்பாடு ஏற்படிடிருந்தபோதிலும் கடைசி நேரம் வரை எந்தக் கட்சியைச் சேர்ந்தவரை மேயர் பதவிக்குப் பிரேரிப்பதென்பதிலும் யார் அவரின் பெயரைப் பிரேரிப்பதென்பதிலும் ஒரு முடிவுஏற்படமுடியாமலிருந்தது.

நேற்று முன்தினமிரவு முன்னாள் மேயர்களில் ஒருவரான திரு. சி. நாகராசாவின் இல்லத்தில் இரண்டு கட்சிகளையும் சேர்ந்த மாநகரசபை அங்கத்தவர்களுக்கிடையிலும். பிரமுகர்களுக்கிடையிலும் பேச்சுவார்த்தை நடந்தது. ஆயினும் அதிலும் ஒரு முடிவு ஏற்படவில்லை. நேற்றுப் பகலிலும் தொடர்ந்த இந்தப் பேச்சுவார்த்தைகள் நேற்றிரவு கோப்பாய்ப் பிரதிநிதியும், தமிழரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. சி. கதிரவேற்பிள்ளையின் இல்லத்தில் நீடித்தது. இப்பேச்சுவார்த்தைகளில் தமிழ்க் காங்கிரஸ்தலைவரும், யாழ்ப்பாணப் பிரதிநிதியுமான திரு, ஜி. ஜி. பொன்னம்பலமும் கலந்துகொண்டார்.

தமிழ் காங்கிரஸ் - தமிழ் அரசு உடன்பாட்டில் முதல் வருடத்திய எந்தக் கட்சியைச் சேர்ந்தவரை மேயராகத் தெரிவுசெய்வதென்பதில்தான் சிக்கல் ஏற்பட்டதாகத் தெரிகிறது. திரு. தா. ச. துரைராசாவையே முதல்வருட மேயராகத் தெரிவுசெய்ய வேண்டுமென்று தமிழ்க்காங்கிரஸாரும் திரு. சி. நாகராஜாவையே முதல்வருட மேயராகத்தெரிவுசெய்யவேண்டுமெனத் தமிழ் அரசுக்கட்சியினரும் வற்புறுத்தியதாகத் தெரிகிறது. நீண்டநேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின் திரு துரைராஜாவை முதல்வருடமேயராகத் தெரிவுசெய்வதற்கு ஒப்புக்கொள்ளப் பட்டதாக அறியப்படுகிறது.

திரு. சி. நாகராசா மேயராக வருவதானல் அவருக்கு ஆதரவளிப்பதாக திரு. ஆ. துரைராஜசிங்கம் தெரிவித்திருக்கிறார். அவரது பெயர் பிரேரிக்கப்படாமல் திரு. துரைராசாவின்பெயர் பிரேரிக்கப்பட்டால் திரு. துரைராஜசிங்கம் யாருக்கும் தமது வாக்கை அளிக்கப் போவதில்லையென்றும் தெரிவித்திருப்பதால் தமிழ்காங்கிரஸ் தமிழ் அரசு கூட்டணிக்கும் திரு. துரையப்பா கோஷ்டியினருக்கும் சமமான வாக்குகளே கிடைக்குமென்றும் இதனல் திருவுளச் சீட்டின் மூலமே மேயர் தெரிவு நடைபெறக்கூடுமென்றும் மாநகரசபை அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாக்கப்பட உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

வடக்குகரையோரப்பகுதியில்இராணுவக்காவல்வலுப்படுத்தப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மானிப்பாய்பட்டினசபை

## முத்துக்குமாரசாமி புதிய தலைவர்

நல்லூர், ஞாயிறு

மானிப்பாய் பட்டினசபைத் தலைவராக திரு. ஸி. முத்துக்குமாரசுவாமிதெரிவு செய்யப்பட்டுள்ளார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. யோசப் தலைமையில் இன்று காலை பட்டினசபைத் தலைவர் தேர்தல் மானிப்பாய்பட்டின சபைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

7 அங்கத்தவர்களைக் கொண்ட மானிப்பாய் பட்டினசபையின் உபதலைவராக திரு. எஸ். மார்க்கண்டு தெரிவு செய்யப்பட்டார். இவர் ஒரு ஹரிஜனர்.

## "நான் குளறியதும் எதிரி ஓட்டம் பிடித்தார்"

### கொலைவழக்கில் கைம்பெண் சாட்சியம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

எனது சகோதரனுக்கு எதிரி கத்தியால் வெட்டியதைக் கண்டதும் அண்ணுவுக்கு வெட்டு விழுகிறது என்று குளறியதும் எதிரி ஒழுங்கையால் ஓட்டம் பிடித்தார் என அல்வாய் வடக்கு வியாபாரி மூலையைச் சேர்ந்த மாசிலாமணி கைம்பெண் நாகம்மா பருத்தித்துறைமாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் வியாபாரி மூலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியத்துக்கு கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டது.

நாகம்மா தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:- எனது அண்ணன் விவாகம் செய்தவர். கமத்தொழில் செய்து வந்தார், சம்பவதினத்தன்று வீட்டில் சாப்பிடுவதற்குஆயத்தமாக இருக்கும்பொழுது ஒரு சத்தம் கேட்டது, 'பாலையில் சுப்பா காசு வேணுமெண்டால் வாடா' என்று ஒழுங்கைப் பக்கமாக இருந்து அச்சத்தம்கேட்டது. அச்சத்தம் எதிரியினுடையதென்று தெரிந்துகொண்டேன். பாலையில்சுப்பா என்பது எனது அண்ணனையே குறிக்கிறது. அச்சத்தத்தைகேட்ட அண்ணன் டோர்ச்லைற்றையும் எடுத்துக் கொண்டுபோனர். அதைத்தொடர்ந்து நானும் அம்மாவும் போனேம். நான் கொண்டுபோன லைட் வெளிச்சமூலம் எதிரிஅண்ணனை இரண்டுதரம் வெட்டுவதைக் கண்டு குளறினேன் பின்னர் அண்ணன் விழுந்து விட்டார். அவரைக் கதை கேட்டபோது ஒன்றும் சொல்லவில்லை.

எதிரி எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் வசிப்பவர் எனது அண்ணனுக்கு எதிரி ரூபா 100 கொடுக்கவேண்டும். காசுத் தகராறுதான் இருவருக்கும் இருந்தது. ஸ்தலத்தில் வைத்து பொலிசாருக்கும் நீதவானுக்கும் முறைப்பாடு கொடுத்தேன். பிரேத பரிசோதனையின்போது சடலத்தை அண்ணனுடையதென அடையாளம் காட்டினேர்.

மேல்விசாரணை வேறொரு திகதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## ராஷ்டிரபதியின் அங்கீகாரம்

சென்னை, ஜன. 12

'தமிழ்நாடு' என்றுபெயர் சூட்டுவதற்கான ராஷ்டிரபதியின் அங்கீகாரம் நேற்று வழங்கப்பட்டது. இதனல் தமிழ்நாடு என்ற பெயர் தமிழர்களின் பெருநாளான தைப்பொங்கல் தினத்திலிருந்து அமுலுக்கு வரலாமெனத் தெரிகிறது.

## தற்கொலைப் படை

சைகோன், ஜன, 12

ஹனேயினல் நிறுவப்பட்ட தற்கொலைப் படை சைகோன் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் பெரும் பயங்கரத்தைஉண்டுபண்ணுவதாகத் தென் வியட்னும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## முக்கிய அறிவித்தல்

குரும்பசிட்டி, சன்மார்க்க சபையின் சன்மார்க்க இளைஞர் சங்க மாத வெளியீடான **'சன்மார்க்க தீபம்'** நுகசொடையிலுள்ள புத்தகங்கள் பத்திரிகைகள் - பதிவாளர் காரியாலயத்தில் சஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. 'சன்மார்க்க தீபம்' என்னும் இப்பெயரைப் பிறசங்கங்களோ அல்லது தனிப்பட்டவர்களோ உபயோகிக்கக் கூடாதென இத்தால் தெரியப்படுத்துகின்றோம்.

தலைவர்,
சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.

1147

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org